விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆனி 21 றம்ழான் 13 இதழ் 142
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5—7—82

# சேபாலாவுக்கு றிமாண்ட்!

## வங்கிப்பணத்தைத் தடுத்துவைக்கவும் நீதவான் கட்டளை

### சகோதரரும் றிமாண்டில்

(கொழும்பு)

இத்தாலியவிமானத்தைக் கடத்திய இலங்கை இளைஞரான சேபால எக்கநாயக்கா இம்மாதம் 16ம் திகதி வரை கொழும்பு நீதவானால் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

இத்தாலியிலிருந்து அவருக்கெதிரான வழக்குப் பத்திரங்கள் கிடைத்தபின்னரே அங்கு திருப்பி அனுப்புவது பற்றித் தீர்மானிக்கப்படும் என்று வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ சி.எஸ். ஹமீட் தெரிவித்தார்.

அச்சுறுத்திப் பணம் பறித்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு நீதவான் திரு. சரத் குணத்திலகா முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர் இலங்கை வங்கியில் வைப்புச் செய்துள்ள 2 லட்சத்து 80,000 டாலர்களையும் தடுத்து வைக்கும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

## நெல்லியடி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்:

# நான்கு இளைஞர்கள் தெல்லிப்பளையில் கைது

(யாழ்ப்பாணம்)

**நெல்லியடி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் மீது நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயுதப்படையினரால் தெல்லிப்பளையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.**

ரோந்து சுற்றிவந்த ஆயுதப்படையினர், சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இந்நான்கு இளைஞர்களையும் கைதுசெய்தனர்.

நெல்லியடிச் சம்பவம் தொடர்பாக, மற்றும் சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்திகளில் ஆயுதப்படையினர் வாகனங்களைச் சோதனையிட்டு வருவதுடன், சில இடங்களில் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

[மா—அ]

## காயமுற்ற பொலிஸ்காரர் கண்டி ஆஸ்பத்திரிக்கு மாற்றப்படுவார்

[யாழ்ப்பாணம்]

நெல்லியடி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த பொலிசாரில் ஒருவரான ஆனந்த என்பவர் நேற்று 'எக்ஸ்ரே' எடுக்கப்பட்டார். இவரது 'எக்ஸ்ரே'யை வைத்திய அதிகாரிபரிசீலித்தபின் சத்திரசிகிச்சைமேற்கொள்ளப்படும் என ஆஸ்பத்திரி வட்டா

(8-ம் பக்கம் பார்க்க)

பிரேதபரிசோதனையின்பின்

# பொலிஸாரின் சடலங்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிச் சந்தியில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இறந்துகிடந்த நான்கு பொலிசாரின் பிரேத பரிசோதனை நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரி பிரேதஅறையில் நடைபெற்றபோது, அவர்களின் உடலிலிருந்து 10 சன்னங்கள் எடுக்கப்பட்டனவாம்.

யாழ். சட்டவைத்திய அதிகாரி திரு எஸ்.சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார்.

இறந்தபொலிசாரின்விபரம்:

அருந்தவராசா (தும்பளை) 5 சன்னங்கள். இவருக்குத் தலையில் சூட்டுக்காயம்.

மல்லவராய்ச்சி (வறக்காப்பொளை) 2 சன்னங்களும் துகள்களும். தலையில் சூட்டுக்காயம்.

குணபால (மா ஓயாவைச் சேர்ந்தவர்) தலையில் சூட்டுக்காயம் இருந்தது சன்னங்கள் எதுவுமில்லை.

அரியரத்ன (பொலிஸ் ஜீப் சாரதி) தலாத்து ஓயாவைச் சேர்ந்தவர்–3 சன்னங்கள்.

நேற்றுமுன்தினம் மாலை சொந்த இடங்களுக்கு இவர்களின் சடலங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. மா—அ

## சீருடையில் ஜீப்பில்வந்து கடைகளையும் மக்களையும் தாக்கினர்

[யாழ்ப்பாணம்]

நெல்லியடியில் நேற்றுமாலை இரு கடைகள் ஜீப்பில் வந்த கோஷ்டியினரால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டன.

சீருடையிலிருந்த கோஷ்டியினர் இத்தாக்குதலை நடத்தினராம். இதனைத் தொடர்ந்து நெல்லியடிப் பகுதியில் திறந்திருந்த கடைகள்மூடப்பட்டன. பொதுமக்கள் பீதிகாரணமாக அங்குமிங்கும் சிதறி ஓடினர்.

இரு கடைகளிலிருந்த அலுமாரிகள் துப்பாக்கிகளால் அடித்து நொருக்கப்பட்டன.

பருத்துத்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த ஜீப்பில் வந்தவர்கள், நெல்லியடியிலுள்ள பேக்கரி ஒன்றின் முன்னால் ஜீப்பைநிறுத்திவிட்டு அங்கு நின்றவர்களை அந்த ஜீப்பை தள்ளச் சொன்னார்களாம்.

பின்னர் ஜீப்பைத் தள்ளியவர்களை ஜீப்பில் வந்தவர்கள்

8-ம் பக்கம் பார்க்க)

## காான்ஸ்டபிள் அருந்தவராஜாவின் பூதவுடல் பொலிஸ் மரியாதையுடன் தகனம்

(புலோலி

கடந்த வெள்ளிக்கிழமை இரவு நெல்லியடிச் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் மரணமான தும்பளையைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ் பிள் அருந்தவராசாவின் பூதவுடல் நேற்றுப் பிற்பகல் அவரது இல்லத்திலிருந்து பொலிஸ், இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கொண்டுசெல்லப்பட்டு பருத்தித்துறை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அருந்தவராசாவின் இல்லத்திற்கு வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஏ நவரத்தினம், யாழ் பொலிஸ் அதிபர் திரு. றிச்சார்ட் விஜயசேகரா உட்படப்பலபொலிஸ் அதிகாரிகள் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இவரின் சடலத்தை பருத்தித்துறை வெளிச்ச வீட்டடியில் பொறுப்பேற்று, அங்கிருந்து பொலிஸ், இராணுவ

[8-ம் பக்கம் பார்க்க]

## நீதவான் மகேசன் காலமானார்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கே. எஸ். மகேசன் 50வது வயதில் மாரடைப்பால் நேற்றுப்பிற்பகல் காலமானார்

நேற்றுக்காலை சுகவீனமுற்ற நீதவான் கே. எஸ். மகேசன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவரது பூதவுடல் பருத்தித்துறைநீதிமன்ற வாசஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த நீதவான் மகேசன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய இவர்சட்டத்தரணியாகப் பயின்று, கொழும்பில்தொழில் நடாத்திவந்தார். 1979ல் யாழ். மேலதிகநீதவானாக நியமனம் பெற்றார். பின்னர்பருத்தித்துறை நீதிமன்ற நீதவானாக நியமிக்கப்பட்டு கடந்த ஒருவருடகாலமாகக் கடமையாற்றினார்.

சிறந்த பேச்சாளரான நீதவான் மகேசன், 'அந்தரத் தீவு' என்னும் விஞ்ஞான நூல்எழுதி வெளியிட்டு சாகித்

[8-ம் பக்கம் பார்க்க]

"காக்கிஉடை அணிந்த ஒருவர்

## எனது காரை மறித்தார்; 7 பேர் காரில் ஏறினர்"

### கார் உரிமையாளர் வாக்குமூலம்

[புலோலி]

' ''எங்களைத் தெரியுமோடா? காரை வேகமாக விடடா!' என்று காருக்குள்ளிருந்தவர் கூறினார். 'சமீபத்தில் விபத்து நடந்ததால், என்னால் வேகமாக ஓடுவது கஷ்டம்' என்று நான் சொன்னேன்.''

நெல்லியடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகப் பொலிசாருக்கு அளித்தவாக்கு மூலத்தில் சுப்பையா தர்மலிங்கம் என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நெல்லியடியில் வர்த்தக ஸ்தாபனமொன்றின் உரிமையாளரான சுப்பையா தர்மலிங்கம் தமதுவாக்குமூலத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''வழக்கமாக இரவு 7-30 மணிக்குச் கடையைப்பூட்டுவேன். நெல்லியடி டியூட்டரியில் எனது இரு பிள்ளைகள் படிக்கிறார்கள். சம்பவம்நடந்த தினமும் எனது காரை எடுத்துக்கொண்டு கூப்பிடப் போனேன். காக்கிஉடை அணிந்த ஒருவர் எனதுகாரைமறித்

[8-ம் பக்கம் பார்க்க]

அரிய சந்தர்ப்பம்

**Computer Programming**

பயிற்சி — மீண்டும் ஒரு புதிய வகுப்பு

ஆரம்பம்: 10 7-82

BASIC – COBOL – FORTRAN – R. P. G II

சிறந்த கம்பியூட்டர் செய்முறைப் பயிற்சிகள் ஒவ்வொரு மாணவர்கட்கும் – O/L அல்லது N. C. G. E. படித்த இருபாலரும் சேரலாம் — நேரில் வரவும்.

நாஷனல் அக்கடமி,
மொம்சாக் கட்டிடம்,
11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

3756

காணி விற்பனைக்கு

மருதனுமடச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உடுவில் றோட்டில், வீடு கட்டக்கூடிய ஐந்து (5) பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
பெ. வெ. செல்லத்துரை,
இளைப்பாறிய கிராமத்தலைமைக்காரன்,
பண்டத்தரிப்பு.

3754

# சரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் தெற்கில்' தபாற் கந்தோருக்கு அருகாமையில், பருத்தித்துறை வீதியிலிருந்து மேற்குப்புறமாக உள்ள ஒழுங்கையில், 100 யார் தொலைவில் பத்துப் (10) பரப்பு தோட்டக் காணி ''அம்புலியப்புலம்'' விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் வசதியான காணி. விபரங்களுக்கு தொடர்பு கொள்க: கந்தையா நாகராசா, சங்கக் கடை அருகாமை பழையவீதி, கோப்பாய்தெற்கு கோப்பாய். 3732

சாய்ப்புச்சாமான்கள் விற்பனை செய்யும் கடைகளுக்குரிய 3 அலுமாரிகள் உடன் விற்பனைக்குண்டு. இல. 8, இ. சுப்பிரமணியம் அன் கொம்பனி, காங்கேசன்துறை வீதி, சுன்னுகம். (3704)

12 இஞ்சி கிறைண்டர், 7ம் நம்பர் அல்லர் விற்பனைக்குண்டு. தேவாஸ் கிரைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3737

## தேவை

ஐந்து வருடங்கட்குக் குறையாத பிடவை வியாபார அனுபவமுடைய ஆண் விற்பனையாளர்கள் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். க. நாகமுத்து அன்சன், 48, 50 பெரியகடை, யாழ்ப்பாணம். 3742

## பயிற்சி

ஒருமாத எலக்றிக்கல் வயரிங்-வெல்டிங் 3 மாத மோட்டார் மெக்கானிக் பயிற்சிகள் 06-07-82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னெலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3739

## சேவை

'சுதர்சன் என்ரபிறைஸ்' நாங்கள் தலைசிறந்த கட்டட வேலை, மரவேலைத்தொழிலாளரைக் கொண்டு மிகச்சிறந்த முறையில் வீடு கட்டிக்கொடுப்போம். நீங்கள் வீடுகட்ட செலவு செய்யும் பணம் சரியான முறையில் முதலீடு செய்யப்படுகின்றதென்பதற்கு நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம். இல. 9, 2ஆம் ஒழுங்கை, பலாலி ரோட், யாழ்ப்பாணம். 3747

சுன்னுகம்
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
சுன்னுகம்

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் நெல் அவித்துக் குற்றிக் கொடுப்பதற்கு கூலிக்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன கேள்வி விண்ணப்பப்பத்திரங்களின் முடிவுதிகதி: 15-7-82 ஆகும். மேலும் விபரங்களையும் விண்ணப்பங்களையும் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம்,
சுன்னுகம்,
2-7-82. (3750)

# சங்கிலியன் ஓவியத்தை வரையுமாறு மேயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

'சிவாஜி மன்னரின் ஓவியத்தை முட்டைக்குள் வரைந்திருக்கும் நுண்கலைக்கலைஞரான நீங்கள் எங்கள் கடைசி தமிழ்மன்னரான சங்கிலியனையும் முட்டைக்குள் ஓவியமாக வரைந்து தரவேண்டும்''

யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராசா விசுவநாதன் மேற்கண்ட வேண்டுகோளைத் தமில்நாடு கலைஞரிடம் விடுத்தார்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்நாடு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியரான நுண்கலைக் கலைஞர் திரு. எம். சண்முகம் முட்டைகளுக்குள்ளும் அரிசிகளிலும் வரைந்த நுண்கலை ஓவியக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இக்கண்காட்சியை பார்த்து பிரமித்துப்போன முதல்வர் திரு. விசுவநாதன், நுண்கலைக் கலைஞரைப் பாராட்டிப்பேசினூர்.

நுண்கலைக்கலைஞர் திரு சண்முகம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் முட்டைக்குள் ஒரு ஓவியம் வரைய சுமார் இருவருஷகாலம் எமக்கு எடுப்பதாகவும் இந்த ஓவியங்கள் அத்தனையையும் 15 வருஷ காலத்துக்குள் தான் வரைந்து முடித்ததாகவும் தெரிவித்தார் அடுத்ததடவை யாழ்ப்பாணம் வரும் பொழுது சங்கிலியமன்னனின் உருவத்தை தான் முட்டைக்குள் வரைந்து கொண்டு வருவதாக திரு. சண்முகம் உறுதியளித்தார்.

வண்ணை வீரமாகாளி

## இன்று தேர்

(நல்லூர்)

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய தேர் உற்சவம் வழக்கம்போல இன்று நடைபெறுகிறது.

## நாளை தேர்

சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் ஆலய ரதோற்சவம் நாளை 6-ந் திகதி காலை நடைபெறும். பிற்பகல் 2 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். கடந்த மாதம் 27-ந் திகதி மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

## பரி. யோவான் இல்லப்போட்டி

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 10ம்திகதி சனிக்கிழமைநடைபெறவிருக்கிறது.

போட்டிக்கு யாழ் மாவட்ட அபிவிருத்திசபைச் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் திருமதி நேசையா பரிசில்களை வழங்குவார்.

இன்று
ஓராண்டு
நினைவஞ்சலி



அமரர் சி. இராசா
தெல்லிப்பழை

தோற்றம்: 14-4-1928

மறைவு: 17-6-1981

எமது அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டு நிறைவு எய்துகிறது. உங்கள் பிரிவால் கண்ணீர்க் கடலில் தத்தளிக்கும் நாங்கள் உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகன், பேரர்.

(3730)

## ஒரேநாளில் 2 1/2 லட்சம் ரூபா சுங்கத்தீர்வை

[மன்னர்]

தலைமன்னர் சுங்க இலாகாவுக்கு ஒரேநாளில் இரண்டரை லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

கொழும்பிலிருந்து தலைமன்னர் துறைக்கு வந்த சுங்கத் திணைக்களத்தினர், சடந்த திங்கட்கிழமை கப்பல் மார்க்கமாக ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னர் துறைமுகத்திற்கு வந்த பிரயாணிகளின் பொதிகளைச் சோதனையிட்டபோதே இரண்டரை லட்சம் ரூபா இறக்குமதி தீர்வையாக விதிக்கப்பட்டது. (இ)

## 'ஆரோக்கியமான சமுதாயம்'

(யாழ்ப்பாணம்)

'குடும்பத்தைத் திட்டமிடுவதன்மூலம் ஆரோக்கியமான சமுதாயமொன்ற நாம் உருவாக்கமுடியும். திட்டமிடாத குடும்பங்களில் வறுமை, ஆரோக்கியமின்மை, கல்வியில் பின்தங்கியநிலை அதிகரித்துக் காணப்படுகிறது. இந்நிலைமையினுல் குடும்பங்களும் சீர்குலைவதுடன் நாட்டிற்கே பாரிய இழப்பு ஏற்பட இடமுண்டு'

மேற்கண்டவாறு இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தால் மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்ட வேலணை மூன்றும், நாலாம் வட்டாரத்திற்கான பாலர் பாடசாலைத் திறப்பு விழா வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் குடும்பத்திட்டச் சங்க மாவட்ட அதிகாரி திரு. ஏ. எஸ். பூவேந்திரன் குறிப்பிட்டார்.

வேலணை கிழக்கு மாதர் கிராம முன்னேற்ச் சங்கம் ஏற்பாடுசெய்த இவ்விழாவிற்கு வேலணை கிராமோதய சபைத் தலைவர் திரு. ச மாணிக்கவாசகர் தலைமைதாங்கினுர்.

மாதர் சங்கத்தலைவியும், அரசினர் நெசவு நிலையங்களின் மேற்பார்வை ஆசிரியையுமாகிய திருமதி பத்மாவதி திருஞானச்செல்வமும் பேசினுர்.

## மோட்டார்சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணெருவர் உட்பட இருவர் படுகாயடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவிலைச் சேர்ந்த சிவராச பூமணி (40 வயது), வை. வீரசிங்கம், ம. சின்னக்கிளி ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எம். பி. நமசிவாயம் விசாரணைசெய்துவருகிறுர். (மா)

# இன்றைய பலன்

ஆனி மாதம் 21-ம் திகதி
திங்கட்கிழமை
(5-7-82)

மேடம்: இணைந்திருக்கும் இதயங்கள் இன்பத்தில் மிதக்கும். பிரிந்தவர் கூடுவர். வேற்றுமைகள் மறையும். புத்திரர் வழியால் புகழும் கிடைக்கும். புண்ணிய விருப்பும் உண்டு.

இடபம்: பகைமூட்டம்வட்டமிடும். வீணுன வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில் துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும். மனத்திடம் வேண்டும்.

மிதுனம்: கனிவான சம்பவங்கள் நடைபெறும். காதலர்களுக்கு கனகுஷியான தினம். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும். குதூகல மகிழ்ச்சியும் உண்டு.

கடகம்: அன்னியர் சகவாசமும் உங்களை ஆபத்தில்மாட்டிவைக்கும். சிறிய விடயத்திற்குக்கூட அதிக ஆத்திரப்படுவீர்கள். உங்கள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றக்கூடும்,

சிங்கம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளும் உண்டு. இலட்சியப்பாதையில் புதியமுன்னேற்றம் காணப்படும் நல்லதினம்.

கன்னி; உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும். உற்சாகமாக கடமையாற்றுவீர்கள். உவகை சேரும். பிரயாணமும் நன்று.

துலாம். எதிர்பாராத பொருள் வரவும் பொதுசன மதிப்பும் இன்று கிடைக்கலாம். நன்மையான காரியங்களில் பணச் செலவு ஏற்படும். டாக்டர்களாயின் நற்புகழ் உண்டு

விருச்சிகம்: நிதியின் முடக்கம் ஏற்படும். சிலர் வீண்பழிக்கும் இலக்காவார்கள். விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவெடுக்கும். பயிர்ச்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம்.

தனு: நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர், உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஊண் விடயத்தில் சுகாதாரம் விரும்பத்தக்கது. நாவடக்கம் நன்று.

மகரம்; மனம் நிறைந்த வாழ்வு. மக்களால் மகிழ்ச்சி இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். செல்வாக்கும் பெருகும்.

கும்பம்: எதிலும் அவசரக் கோலம் தென்படும். சகோதர வழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. இளமை நினைவுகள் வேதனையைத் தரும். மனத்திடம் மருந்தாகும்.

மீனம்: மதிநுட்பத்தின்மூலம் மற்றவர்களின் மனதை கவருவீர்கள். பயன்தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். அறவழி நாட்டம் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இன்று பொங்கல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவமும், தீக்குளித்தல் வழிவெட்டல், காப்புக்கட்டல் நிகழ்ச்சிகளும் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது. வழமைபோல் இப்பொங்கல் உற்சவம் சிறப்பாக நடைபெற ஆலய தர்மகர்த்தாசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு முன்னேடியாக நடைபெறும் அம்பாள் ஊர்வலமும், முத்தரிசித் தண்டலும் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஞாயிற்றுகிழமை அன்னதான நிகழ்ச்சியும் இடம்பெற்றன, (வண்-நிரு)

## சின்னத்தம்பி நாடு திரும்பினுர்

(கொழும்பு)

பீக்கிங் வானெலி நிலையத்தின் தமிழ்ப்பகுதியில் கடந்த பதினூறு ஆண்டுகளாகப் பணிபுரிந்த திரு. வி. சின்னத்தம்பி தமது பணிமுடிந்து, தாயகம் திரும்பியுள்ளார். அயல்மொழி பதிப்பகத்தில் முன்னர் பணிபுரிந்த அவருடைய துணைவியார் திருமதி ராணி சின்னத்தம்பியும் நாடு திரும்பினர்.

சீனுவில் நடைபெற்ற கலாசாரப் புரட்சியின் ஆரம்ப காலத்தில்அரசாங்கசேவையை விட்டு விலகி பீக்கிங் சென்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

''எனது திருமணம் பீக்கிங்கில் நடைபெற்றது. எனது பிள்ளைகள் பீக்கிங்கில் பிறந்தனர். பதினூறு ஆண்டுகள் தினமும் சீன நண்பர்களுடன் வேலை செய்தேன். பல்வேறு பட்ட சீன நண்பர்களுடன் பழகினேன். இத்தகைய நிலைமையில் சீன மக்களுடனுன எனது நட்ப மிகவும் ஆழமானது'' என்று அவர் நமது நிருபரிடம் கூறினர்.

பீக்கிங்கில் வாழ்ந்த காலத்தில் 5-வது உலகத் தமிழ்மகாநாட்டில் கலந்துகொண்டதையும், மகள் சீனேதயா பாரதி பாடல் பாடியதையும், பீக்கிங்கில் பாரதிவிழா நடத்தியதையும் அவர் பெருமையுடன் நினைவு கூருகின்றுர்.

## விண்ணப்பம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுதேச காவல்படைக்கு ஆட்சேர்க்கும் வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவாவினது மேற்பார்வையில் விசேட சேவை உத்தியோகத்தர்கள் கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக இதற்கான விண்ணப்பங்களை சேகரித்து வருகின்றனர்.

## வருடாந்த ஒன்று கூடல்

(கொடிகாமம்)

உசன் இராமநாதன் மகாவித்தியாலய வருடாந்த ஒன்றுகூடல் வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. திரு. தே அ. அரியபூஷணம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ)

## புதிய கட்டிடத்தில் வங்கிக்கிளை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பட்டினசபைக் கட்டிடத்தில் இயங்கி வரும் இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளை இன்று திங்கட்கிழமை தொடக்கம் மானிப்பாய் மத்திய சந்தைக்கு பக்கத்திலுள்ள புதிய கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. இலங்கைவங்கி யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. கா. வே. முத்துக்குமாரசாமி புதிய கட்டிடத்தில் வங்கிக் கிளையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

## பழமரச் செய்கை

(மன்னுர்)

குறைந்த நீரில் பழமரங்கள் வளர்க்கும் பரீட்சார்த்ததிட்டமொன்று மன்னுர் கச்சேரியில் மன்னுர் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவனுல் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதன்மூலம் மன்னுர் மாவட்டத்தில் நீரில்லாத இடங்களிலும் பழமரச் செய்கையை மேற்கொள்ளலாமெனக் கூறப்படுகிறது. (இ)

# பெய்ருட்டில் மீண்டும் டாங்கிகள் முழங்குகின்றன

# இஸ்ரேலியப்படைகள் முன்னேறுகின்றன!

## யுத்தத்தை கண்டித்து 80,000 இஸ்ரேலியர் ஊர்வலம்

பெய்ரூட், ஜூலை 4

கடந்தாட்டுத் தினங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த பெய்ரூட் யுத்தம் மீண்டும் தொடங்கியுள்ளது. இவ்யுத்த ஆரம்பத்துக்கு இஸ்ரேலும், பாலஸ்தீனமும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

**ஆரம்பம்**

பெய்ரூட்டின் மேற்குப் பகுதியில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த இஸ்ரேலிய டாங்கி வண்டிகள் மீது பாலஸ்தீன கொரில்லாக்களால் டாங்கி எதிர்ப்புப் பீரங்கி கொண்டு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டனவென்றும், இதற்குப் பதிலடியாகவே இஸ்ரேலிய இராணுவம் தாக்குதலை ஆரம்பித்துள்ளதென்றும் அறிவிக்கப்படுகின்றது.

புதிய தாக்குதல்களை ஆரம்பித்திருக்கும் இஸ்ரேலியப் படைகள் பெய்ரூட்டினுள் மேலும் முன்னேறிச் செல்கின்றனவென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**மாஸ்கோ பயணம்**

இஸ்ரேலியரின் ஊடுருவலுக்கெதிராகவும், பாலஸ்தீனியர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கெதிராகவும் தீவிரமாகச் செயற்பட்டுவரும் அரபுலீக்கோஷ்டி சோவியத் யூனியனின் அனுதாபத்தைப்பெறும் வகையில் மாஸ்கோ சென்றுள்ளது. சவூதி அரேபியாவின் தைவ் நகரில் நடத்தப்பட்ட உச்சி மகாநாட்டின் தீர்மானங்களுக்கமையவே தமது நிலையை மாஸ்கோவில் அறிவிப்பதென அரபுலீக் கோஷ்டி தெரிவித்துள்ளது.

**கடும் நடவடிக்கை**

ரபீல்ட் அல்ரன் என்ற இஸ்ரேலிய இராணுவ அதிகாரி பாலஸ்தீனியர் மீது தாம்கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தை நடாத்துகிறோம் என்று கூறிக்கொண்டு பாலஸ்தீன கொரில்லாக்கள் பெய்ரூட்டிலுள்ள நிலைகளைப் பலப்படுத்தி வருவதுடன், பெய்ரூட்டிலிருந்தும் வெளியேறுவதில் அவர்கள் தாமதம் காட்டுகின்றனர் என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

**இஸ்ரேலின் இழப்பு**

தென் லெபனானில் மேற்கொண்ட ஊடுருவலையடுத்து தனது இராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்பை நேற்று முன்தினம் இஸ்ரேல் வெளியிட்டது. கடந்த ஜூன் ஆறுந்திகதி இஸ்ரேலிய ஊடுருவல் ஆரம்பமானதிலிருந்து இதுவரை இருநூற்றியெழுபது வீரர்கள் பலியாகியிருப்பது அது வெளியிட்ட அறிக்கையிலிருந்து தெரியவந்துள்ளது. இதேவேளை பாலஸ்தீனத்தரப்பில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதுடன் பலர் காயமடைந்துள்ளனர். ஆறுபிரம் பேர்கள் கைதாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

**மதிப்பீடு**

இஸ்ரேலிய நாட்டுப் பத்திரிகையொன்று தனது நாட்டு இராணுவநடவடிக்கைகுறித்து மக்கள் மத்தியில் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்தியிருந்தது. அவ்வாக்கெடுப்பில் 77சதவீதமானோர் இஸ்ரேலிய இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்கு ஆதரவளித்துள்ளனர். தற்போதைய நிலையில் ஒரு பொதுத்தேர்தல் நடக்குமானால் பிரதமர் திரு. மெனச்சம் பெகின் பலத்த ஆதரவுடன் வெற்றிபெறுவார் என அப்பத்திரிகை தான் நடத்திய வாக்கெடுப்பைக்கொண்டு கருத்து வெளியிட்டுள்ளது.

**கண்டனம்**

பெரும்பான்மை இஸ்ரேலியர் இஸ்ரேலிய அரசின் நடவடிக்கைகளை ஆதரித்திருக்கும் அதே சமயம் எண்பதினாயிரம் இஸ்ரேலியர்கள் நேற்று முன்தினம் டெல்அவீவில் இஸ்ரேலிய ஊடுருவலுக்கெதிராகப் பெருங்கண்டன ஊர்வலத்தை நடத்தினர். ஊர்வலக்காரர்கள், இராணுவ நடவடிக்கைகளை எதிர்க்கும் கோஷங்களை எழுப்பி எதிர்ப்பு சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகள், பதாகைகளையும் ஏந்திச் சென்றனர். பிரதமர் பெகின்பதவி விலகவேண்டும் என்றும் ஊர்வலத்தில் சென்றோர் கோஷமெழுப்பினர்.

**கனடா நிதியுதவி**

தென் லெபனானில் நடைபெற்ற மோதலால் பாதிப்படைந்தவர்களுக்கு பத்து லட்சம் டாலர்களை கனேடிய அரசாங்கம் நிவாரண நிதியாக வழங்கியுள்ளது. இஸ்ரேலிய ஊடுருவலை கனடா கண்டித்திருக்கின்ற போதிலும், அதன் மீது பொருளாதாரத்தடைகள் எதனையும் மேற்கொள்ளமாட்டாதெனத் தெரிவித்தது.

சர்வதேச மன்னிப்புச் சங்கம் இஸ்ரேலில் அது கைது செய்துள்ள ஆறுயிரம பாலஸ்தீன கொரில்லாக்களையும் மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டுமென பிரதமர் மெனச்சம் பெகினைக் கேட்டுள்ளது. (இ)

## மூன்றும் உலகை நாடும் ஆயுத உற்பத்திகள்!

புதுடில்லி, ஜூலை 4

மேற்கத்திய தொழில்துறை விருத்தியற்றநாடுகளின் செலவீனத்தில் 75 சத விகிதம் ஆயுத உற்பத்திக்கு செலவாகின்றதென்றும் இந்த ஆயுத உற்பத்தியில் 7 5 சதவீதம் வறிய, மூன்றும் உலக நாடுகளுக்கு செல்கின்றது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப்பின்னர் வெடித்த சர்வதேச மோதல்களில் 9 சத விகிதம் மூன்றும் உலகிலேயே நிகழ்ந்துள்ளன. இதில் மூன்றிலிரண்டில் நேரடியாகவோ மறைமுகமாகவோ நாடுகள் சம்பந்தப்பட்டிருந்தன.

மூன்றும் உலகு வாங்கும் ஆயுதத் தொகையில் அமெரிக்காவின்பங்கு 45சத விகிதம். மேற்கு ஐரோப்பாவின் பங்கு 20சத விகிதம். இந்த ஆயுத வர்த்தகத்தில் சில மூன்றும் உலக நாடுகளும் சம்பந்தப்பட்டுள்ளன. என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

1980ல் உலக ஆயுதச் செலவில் மூன்றும் உலகின் பங்கு 16.1 சதவிகிதமாகவிருந்தது இதில் இஸ்ரேல் தவிர) மத்திய கிழக்கு நாடுகளின் பங்குமத்தியகிழக்குநாடுகளின் பங்கு 7.8 சதவிகிதமாகவும் தென்னாசியா ஆபிரிக்கா லத்தீன் அமெரிக்காவின் பங்கு ஒவ்வொன்றுக்கும் 2 சத விகிதமாகவும் இருக்கிறது.

## மற்றொரு இலங்கைப் பெண்ணுக்கு கசையடி!

[கொழும்பு]

அரபு நாடு ஒன்றில் இந்திய வாலிபர் ஒருவருடன் தகாத உறவுவைத்த மற்றொரு இலங்கைப் பெண்ணுக்கு 79 கசையடிகள் வழங்குமாறும் நாடு கடத்துமாறும் இஸ்லாமிய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இலங்கை இளம்பெண்ணுடன் தகாத உறவுவைத்த இந்திய இளைஞருக்கு 95 கசையடிகளுடன் 2 மாதச் சிறையும் அனுபவித்த பின்னர் நாடு கடத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப்பெண் பற்றிய விபரங்களைச் சேகரிக்குமாறு இலங்கை வெளிநாட்டமைச்சு அபுதாபியிலுள்ள இலங்கைத் தூதரகத்தைப் பணித்துள்ளது. (இ)

## மாவைக்கந்தன் பத்தாம் திருவிழா

[யாழ்ப்பாணம்]

இன்று மாவைக்கந்தன் பத்தாம் திருவிழா. 'சிறுத்தொண்டர்' என்னும் பொருள் பற்றி பொன் தெய்வேந்திரன் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

## 15 வயது சீன சிறுவன் பட்டதாரியாகிறான்!

பீகிங், ஜூலை. 4

சீனாவில் யன்பொ என்ற பதினைந்து வயதுச்சிறுவன் பட்டதாரியாக அங்குள்ள பல்கலைக்கழக மொன்றிலிருந்தும் வெளியேறியுள்ளான். பதினொரு வயதில் பல்கலைக்கழகத்தினுள் பிரவேசித்த இச்சிறுவன் தனது நான்குவருடப் படிப்பின்பின் சீனாவிலேயே வயதில் குறைந்த பட்டதாரியாக தற்போது விளங்குகின்றான்.

சீனாவின் கிழக்குப்பகுதியிலிருக்கும் 'அன்ஹுய்' மாகாணத்தைச் சேர்ந்த இவ் அதி இளம் பட்டதாரி பல்கலைக்கழக அனுமதிக்காக இங்கு நடத்தப்படும் தேசியப் பரீட்சைக்குத் தோற்றி சராசரியாக 64. 4 புள்ளிகளைப் பெற்றிருந்தார். அவ்வேளை அதிகூடிய சராசரியாக 68 புள்ளிகளே விளங்கின.

பட்டப்படிப்பின் இறுதிப் பரீட்சையில் இயந்திரவியல் பாடமொன்றில் சிறுவன் யன்பொ 79 புள்ளிகளைப் பெற்று முதலாவதாகத் தேறினான் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

## சோ. ஜ. கட்சித் தலைவராக முன்னாள் அமைச்சர் தெரிவு

லண்டன், ஜூலை. 4

இங்கிலாந்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சோஷலிச ஜனநாயகக் கட்சித்தலைவராக முன்னாள் சிரேஷ்ட தொழிலமைச்சர் திரு. ரோய் ஜென்கின்ஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்,

இப்புதிய கட்சியின் 65,000 அங்கத்தவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட தேர்தலிலேயே திரு. ஜென்குன்ஸ் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தலைவராகத் தெரிவானார்.

திரு. ரோய் ஜென்கின்ஸ் தமது தெரிவு குறித்து அடுத்துத் தேரிவிக்கையில் கருத்தமுறை நடைபெறவிருக்கும் இங்கிலாந்தின் பொதத் தேர்தலில் தமது கட்சியே ஆட்சியைக் கைப்பற்றுமெனக் கூறினார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் திரு. டேவிட் ஓவனே, திரு. ஜென்கின்ஸ்ஸை எதிர்த்துப் போட்டியிட்டவராவர். ஐயாயிரம் அதிகப்படியானவாக்குகளால் திரு ஜென்கின்ஸ் இவரைத் தோற்கடித்திருந்தார். (கி)

## கியூபா ராஜதந்திரியிடமிருந்து அமெரிக்க தகவல்சாதனங்கள் பறிமுதல்

நியூயோர்க். ஜூலை, 4

கியூபாநாட்டு ராஜதந்திரியொருவரிடமிருந்த அமெரிக்கத்தயாரிப்பு தொலைக்காட்சி செய்மதி தகவல் சாதனங்களை அமெரிக்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இச்சாதனங்களை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அங்கத்துவ ரொருவரே அமெரிக்காவில் கொள்வனவுசெய்திருந்தாரென்றும், அவற்றை பிரஸ்தாப கியூபா ராஜதந்திரி சோவியத் யூனியனுக்கு கொண்டுசெல்ல முற்பட்டாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் தொழில் நுட்பமுறைகளை சோவியத் யூனியன் அறிந்து கொள்ளாமல் இருக்கும் பொருட்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதெனவும், இதுவரை சுமார் மூன்று கோடி டாலர்கள் பெறுமதியான அமெரிக்க தொழில் நுட்பச்சாதனங்கள் சோவியத் யூனியனுக்குக் கடத்த முற்பட்ட சமயம் பறிமுதல் செய்யப்பட்டனவென்றும் அமெரிக்க அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (கி)

## பொலிஸார் சுட்டதில் பலி

சென்னை, ஜூலை 4

தென்னாற்காட்டில் கோஷ்டி மோதலைக் கட்டுப்படுத்த பொலிசார் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் பலியானார் நால்வர் படுகாயமடைந்தனர்.

ஒருவகுப்பு இளம்பெண் ஒருவரை மற்றொருவகுப்பைச சேர்ந்த இளைஞர் ஒருவர் கேலி செய்ததை அடுத்தே இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதல்லில் 5பொலிசாரும் மற்றும் 18 பேரும் காயமடைந்தனர். (இ)

## இஸ்ரேலுக்கு ஈழமாணவர் பொதுமன்றம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஈழவிடுதலைக்காகப் போராடும் ஈழமக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் கையாளான இஸ்ரேல் அரசுக்கும் எதிரான தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுந்தவதோடு பாலஸ்தீன மக்களின் வீரம்மிகு தமது உறுதியான ஆதரவை நல்க வேண்டும்.

இவ்வாறு தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை ஈழ மாணவர் பொதுமன்றம் வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகில் உள்ள விடுதலை இயக்கங்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அழித்தொழித்துவிட்டு தாங்கள் நிம்மதியாக இருக்கலாம் என்று இஸ்ரவேலிய சியோனிச அரசும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் கனவு காணுகின்ற

ஜர்மனியின் நாசிச அரசின் வாரிசாக மனித நாகரீகத்திற்கே ஒரு அவமானச் சின்னமாக இன்றய இஸ்ரவேலிய சியோனிச அரசு காணப்படுகிறது.

தங்களுடைய சொந்ததாயகமான பாலஸ்தீனத்திலிருந்து வெளியேற்றப்பட்டது மாத்திரமல்லாமல், அண்டைநாடுகளில் அகதிகளாய் சென்றடைந்த மக்களை அங்கேயும் சென்று அழித்தொழிக்கும் முயற்சிகளை இஸ்ரேலிய சியோனிச அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் செய்து வருகின்றது

இஸ்ரவேலின் ஈனத்தனமான வெட்கக்கேடான இச்செய்கைகை ஈழமாணவர் பொதுமன்றம் வன்மையாகக் கண்டிப்பதோடு, கடந்த முப்பத்தைந்து வருடங்களாக பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில் போராடிவரும் பாலஸ்தீனர்களுக்கு தனது உறுதியான ஆதரவை தெரிவித்துக் கொள்கின்றது. (இ)

### மணிவாக்கு

''ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ''?

—சேக்கிழார்.

# நமது நோக்கு

## அவசிய தேவை; அரசியல் ஞானம்

''எப்பொழுது எங்கே தர்மம் தலைசாய்ந்து அதர்மம் தலையோங்குகிறதோ அப்பொழுது அங்கே நான் அவதரிக்கிறேன்''

பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா தானாகவே இக்கோட்பாட்டைக் கூறியிருக்கிறார். ஏன் அவதரிக்கிறார் என்பது.

''பக்தர்களைப் பாதுகாக்கவும், துஷ்டர்களை நிஷ்கரிக்கவும், தர்மநெறியை நிலைநாட்டவும் யுகம் தோறும் நான் அவதரிப்பேன்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உலக அரங்கில் மட்டுமல்ல, எங்கள் நாட்டிலும் எங்கள் சமூகத்திலும் துஷ்டர்களை நிஷ்கரிக்க, தர்மநெறியைக்காக்க இப்பொழுதைவிட வேறெப்பொழுது தகுந்த தருணம்?

நேற்றைய நாளாகிய யூலை 4-ம் திகதி எங்கள் பத்திரிகை அந்தநாளின் மகத்துவத்தை படங்கள் மூலமும் கட்டுரைகள் மூலமும் மிகத்தெளிவாய் விளக்கியுள்ளது.

உலக அரங்கிலே உழைப்பினால் உயர்ந்த உலக வல்லரசான அமெரிக்கா இத்திகதி 206 ஆண்டுகளுக்கு முன் சுதந்திரமடைந்த தினம்.

அது மட்டுமல்ல, இந்த அமெரிக்காவில் 1893-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் திகதி சிக்காகோ நகரத்தில் நிகழ்ந்த உலக சமயப் பேரவையில் உலகப்பிரசித்திபெற்ற சொற்பொழிவை நிகழ்த்திய சுவாமி விவேகானந்தர் சமாதியடைந்த 80-ஆண்டு தினம்.

எமது நாட்டிலே, எமது சமூகத்துக்கும் கல்விக்கும் சமுதாய அபிவிருத்திக்கும் அயராது உழைத்த இந்து போர்ட் இராசரத்தினம் அவர்களின் நினைவு தினம். எம்மிற் பலர் அதனை மறந்துவிட்டதினம்.

இது இவ்வாறாக எங்கள் பத்திரிகைக்கு நேற்றும், முந்தநாளும் ஏற்பட்ட கிராக்கிக்கு இந்த முக்கியத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் காரணமல்ல.

ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்ட 'அதர்மம்தலையோங்கும்' செய்தியைப் படிக்கும் ஆவல்தான் பத்திரிகைத் தட்டுப்பாட்டுக்குக் காரணம்.

உலகத்துக்கு ஜனநாயக தர்மத்தை அறிமுகப்படுத்தி அதனை நாட்டின் வாழ்வில் செயற்படுத்திய ஆபிரகாம் லிங்கனின் அமெரிக்கா, இன்று ''செல்வம்வந்துற்ற காலை...'' பாட்டை முடிக்க எமக்கு மனமெழவில்லை; பாட்டை மனனம் செய்ய விரும்பியதுமில்லை.

பெய்ரூட்டில் மீண்டும் சண்டையாம்! எனது ஆட்கள் பாடு என்ன? இந்தப் பயங்கரப் போரை அமெரிக்கா தடுக்க முடியாதா? என்ற விசனமுடையோர், இந்து தர்மத்தை இலங்கை வந்து, யாழ்ப்பாணம் வந்து போதித்த வேதாந்த வித்தகர் கதை என்னவானாலும் நெல்லியடியில் நால்வர் பலியான சம்பவம் படிக்க அந்தரித்தவர்; இத்தாலிய விமானத்தைக் கடத்திய 'வீரனின்' மிச்சச் சொச்ச கதையை அறிய ஆவலுடையோர் இவர்களே எங்கள் பத்திரிகையின் தட்டுப்பாட்டுக்குக் காரணகர்த்தாக்கள்!

எப்படி இருக்கிறது உலகம்? எங்கே கிருஷ்ணவதாரம்?

உலக வரலாற்றுக்கு ஒவ்வாத உண்மை எதுவும் கீதையில் இருக்கிறதென்று சொல்ல எவரும் துணியார்! ''கீதையே அகிலத்துக்கும் அன்னை'' என்கிறார் மகாத்மா காந்தி.

ஏமாற்றமடையாதமுறையில் இதனை விளங்கிக் கொள்ள வேண்டுமானால் இன்றைய உலக வரலாற்றின் முக்கிய அம்சங்கள் நாமறிந்திருக்கவேண்டும்.

''பெரும்பான்மையோரது நினைப்பே நிறைவேறுமாயினும், அது நேர்மையானதாக இருக்கவேண்டும்; சிறுபான்மையினருக்கு சம உரிமை இருக்க வேண்டும். ஒரே சட்டம் அனைவரையும் பாதுகாத்தல் வேண்டும்! அதற்கு முரண்பாடாக நடப்பது கொடுஞ் செயலாகும்!!

ஆண்டவனின் அவதார புருஷனாக மதிக்கப்படக்கூடிய ஆபிரகாம்லிங்கன் வகுத்த இக்கொள்கை அமெரிக்காவிலேயோ அல்லது எங்கள் நாட்டிலேயோ எவ்வளவு தூரம் அமுலில் இருக்கின்றது?

எங்கள் நாட்டை எங்கள் சமூகத்தை வாட்டி வரும் பயங்கரவாதம் – எத்தனை அருமையான உயிர்களைக் கொன்று குவிக்கும் பயங்கரவாதம்; இக்கொள்கைமுறை கேட்டால், இக் கொடுமையால் உருவானதல்லவா?

இந்தப்பயங்கரவாதத்தை யார் ஆதரிப்பார்? இதனை ஒழிக்க முன்வருவதற்கு யார் பின்னிற்பார்?

வன்செயலுக்கு கண்டனம் என்பது ஒரு பெரிய செய்தியா? நெல்லியடிச் சந்தியில் நடந்த நான்கு பொலிசார் படுகொலைக்குத் தகவல் உதவ, ஐந்து லட்சம் ரூபா சன்மானத்தை எந்தப் பண்பாளன் எதிர்பார்க்கின்றார்? எவருமில்லை; யாழ்ப்பாணத்தில் இவ்வித கொலைகள் கொள்ளைகள் தொடர்கின்றனவே என்று கவலைப்படாதார் எவருமில்லை.

அதே சமயம் தாழ்வுற்ற தமிழ் இனம். தப்பும் வழியெது என்று திக்கற்ற நிலையில், வெளிநாடுகளில் தங்கள் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் செயல்களில் அரசு அவநம்பிக்கை கொள்வது அரசியல் ஞானமாகாது.

உண்மை பரிசுத்தமானது; ஆகையால் உண்மை பலம் தரும்; வீரத்தையும் பெருக்கும்.

வீரம் எது, கோழைத்தனம் எது என்று அரசும் மக்களும் புரிய முடியாத இன்றைய நிலையில் பயங்கரவாதம், உள்ளூர், அரசு, சர்வதேச– இம் மூன்றுவழிகளிலும் தொடரத்தான்செய்யும்.

இந்த நிலையிலிருந்து நாட்டை மீட்க மக்கள் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும்.

# இலங்கைத் தமிழரின் இன்றைய நிலை

### இராமலிங்கம் பாலசுப்பிரமணியம்

(சட்டத்தரணி)

இலங்கைத்தமிழரின் எதிர்காலம் பற்றி நியுயோர்க்கில் மகாநாடு நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது நிலையைச் சிந்தித்துப்பார்ப்பது பொருத்தமாகும்,

ஈழத்தமிழர் இறைமை இப்பொழுது யார்வசம் உள்ளது? சட்ட ரீதியில் ஈழத்தமிழரின் இன்றைய நிலை என்ன? ஈழத்தமிழர் ஒரு நாட்டிலுள்ள ஓர் சிறுபான்மை இனமா? ஈழத்தமிழர் பிரச்னை ஓர் உள்நாட்டுப்பிரச்னையா?

ஈழத்தமிழர்களால் மட்டுமல்ல சுதந்திரத்தை விரும்பும் ஒவ்வொரு நாட்டவர்களாலும் கூட ஆராயப்படும் விடயங்களில் இவையும் சிலவாகும்.


இப்பிரச்னைகளை விளங்கிக் கொள்வதற்காக ''ஸ்ரீ லங்கா குடியரசினால் தமிழ்த்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிராக 1976-ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 1-ம் இலக்க ட்ரயல் அட் பார் வழக்கில் அமரர் ''திரு'' எடுத்துரைத்த வாதத்தில் சிலவற்றை அதன் தீர்ப்பிலிருந்து கீழே தருகின்றேன்.

''சட்டத்தொடர்பு துண்டிக்கப்பட்டவுடன் இதுவரை கிரகணம் பீடித்தமைபோல் சொல்லக்கூடியவகையில் அஸ்தமித்திருந்த இத்தீவு மக்களின் இறைமைகள் மீண்டும் தோன்றின எனவே இன ரீதியிலோ பூகோள ரீதியிலோ முற்றிலும் வேறானதும் தனித்துவம் பெற்றதுமான தமிழ் தேசிய இனத்தின் இறைமை மீண்டும் உதித்தது

''சாத்திர ரீதியில் தமிழ்த் தேசிய இனத்துக்குச் சொந்தமாயிருந்த யாழ்ப்பாண பட்டனம் (அரசு) இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதிகளில் புத்தள எல்லையிலிருந்து மண்ணூர் வரை வந்து குமபுக்கள் ஓயா வரை பரந்திருந்தது. எனவே பல்வேறு தேசிய இனங்களுக்கு ஏற்கக்கூடிய ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதற்கு தமிழ் தேசிய இனத்தின் பெரும்பான்மையினரின் விருப்பத்தை அறிந்திருக்கவேண்டும்.

''அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரதியை தீயிட்டு ஓர் பகிரங்க ஆர்ப்பாட்டம் செய்ததன் மூலம் தமிழப் பிரதிநிதிகள் அதற்குத் தங்கள் எதிர்ப்பைத தெரிவித்துள்ளனர்.

பல்வேறு இனங்களுக்கு ஏற்கக்கூடிய ஓர் அரசியல் அமைப்பைத் தலைகளை எண்ணுவதன் மூலம் மட்டும் நிலைநாட்ட முடியாது, புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை தமிழ் தேசிய இனத்தின் பெரும்பான்மையினர் எற்றுள்ளார்களா என்பதே கேள்வியாகும் இது ஓர் பொதுசன வாக்கெடுப்பு மூலம் அறியப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இது நடைபெறவில்லை. இப்போதைய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் வீணையதற்கும் சட்டத்தொடர்பு இல்லாத காரணத்தாலும் அதுபல்வேறு இனங்களாலும் ஏற்கப்பட்டதென்ற கோரிக்கையும் வலுவுற்றபடியாலும் அரசியல் அமைப்புச் சட்டம் சட்டப்படி செல்லுபடியற்றதுடன் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்களும் செல்லுபடியற்றவையாகும்.''



இவ்வாறு அமரர் ''திரு'' எடுத்துரைத்த சமர்ப்பணங்கள் பின்வரும் ஆதாரங்களை கொண்டுள்ளது.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தருமுன்பு இலங்கையின் மூன்று பெரும் இராசதானிகள் இருந்தன. (1) கோட்டை. (2) கண்டி (3) யாழ்ப்பாணம்.

எனவே இந்த மூன்று இராசதானிகளிலும் இருந்த மக்களின் இறைமை அந்தந்த இராசதானியின் அரசனில் இருந்தது. அதாவது கோட்டை மக்களின்இறைமை கோட்டை அரசனிலும் கண்டி மக்களின் இறைமை கண்டி அரசனிலும் தமிழ்மக்களின் இறைமை யாழ். அரசனிலும் இருந்தன.

கி. பி. 1597 கோட்டைச் சக்கரவர்த்தி டொம்ஜோடோ பறிய பண்டார் போத்துக்கேயர் மீதுள்ள அன்பினாலும் பாசத்தினாலும் தனது இராசதானியை ஓர் மரணசாதனம் மூலம் போத்துக்கேயருக்குக் கையளித்தார். [இதுறுபெரூ] எழுதிய 'இலங்கை' [Ceilea by Rubeire); என்னும் புத்தகத்தின் 90-91-ம் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோட்டை மன்னன் இறந்தவுடன் கோட்டை மக்களின் இறைமை போர்த்துக்கேயர் வசம் சென்றடைந்தது.

அந்நேரத்தில் யாழ்ப்பாணத்தை தமிழ் அரசன் ஆண்டு கொண்டிருந்தான் என்று அப்புத்தகத்தின் அதே பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண அரசின் எல்லைகள் 'கிளக்கோன்ஸ் மினிர்ஸ்' (Claghorn's Minutes இல் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதன்படி யாழ்ப்பாண இராசதாணியின் எல்லைகள் புத்தளத்திலிருந்து மன்னார் வரையும் அதிலிருந்து குப்புக்கன்ஓயாவரையும் பரந்துஇருந்தது.

யாழ்ப்பாண இராசதானி கி. பி 1619ல்ஆண்டில் சங்கிலி மன்னனின் வீழ்ச்சியுடன் போர்த்துக்கேயர் வசம் சென்றடைய தமிழ் மக்களின் இறைமையும் போர்த்துக்கேயரிடம் சென்றடைந்தது.

இதன்பின் தமிழ் மக்களின் இறைமையும் கோட்டை மக்களின் இறைமையும் ஒல்லாந்தருக்குச்சென்று பின்பு ஆங்கிலேயர் வச சென்றடைய கண்டி மக்களின் இறைமை நேரடியாக கி. பி. 1815ம் ஆண்டு நேரடியாக ஆங்கிலேயர் வசம் சென்றடைந்தது.

இம்மூன்று இராசதானிகளையும் உள்ளடக்கிய இலங்கைத் தீவு முழுவதையும் ஆங்கிலேயர் 1833ம் ஆண்டுவரை மூன்று பிரிவுகளாகவே ஆண்டு வந்தனர். அதன்பின் கோல்பறூக் ஆணையாளரின் சிபார்சின் பேரில் இம்மூன்று இராசதானிகளும் நிர்வாக வசதிக்காக ஒன்றிணைக்கப்பட்டன.

இலங்கைக்குச் சுதந்திரம் 1947ல் வழங்கப்பட்டபொழுது 1947ம் ஆண்டின் இலங்கைச் சுதந்திரச்சட்டத்தின் மூலம் ஒரு அரசகட்டளை மட்டும் வழங்கப்பட்டது. 1948ம் பெப்ரவரி மாதம் 4ந் திகதி இலங்கை அரசியலமைப்பு அரசகட்டளை அமுலுக்கு வந்தது. இந்த அரசகட்டளை அரசியல் அமைப்பை மாற்றும் அதிகாரத்தை இலங்கைப் பாராளுமன்றத்துக்கு முழுமையாக வழங்கவில்லை. ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 29 உடபிரிவு 2ஐ மீறுது சில திருத்தங்களை மட்டும் செய்யமுடியும்.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந்திய சுதந்திரச் சட்டம் அப்படியிருக்கவில்லை. அது இந்தியாவில் இயங்கி வந்த அரசியல் நிர்ணய சபைக்கு இந்தியா முழுவதற்கும் ஒரு அரசியலமைப்பை தயாரிக்கும் அதிகாரம் வழங்கியிருந்தது எனவே 1970ல் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை அமைக்கும்பொழுது சட்டத் தொடர்புடன்ஏற்பத்துடுவதாயின் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருக்கவேண்டும். அல்லாவிட்டால் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துடன் இருந்த சட்டத் தொடர்பை துண்டித்திருக்க வேண்டும்.

எனவேதான் 19-7-1970-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான சட்டத்தொடர்பைத் துண்டிப்பதற்காக அன்றைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டு இலங்கைக்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்குமிடையிலான சட்டத் தொடர்புதுண்டிக்கப்டட்டது.

மேற்குறித்தவாறு சட்டத் தொடர்பு துண்டிக்கப்பட்டவுடன் இலங்கைத்தீவிலுள்ள மக்களின் இறைமைகள் அதாவது கண்டி மக்களின் இறைமை, கோட்டை மக்களின் இறைமை, [யாழ்ப்பாண] தமிழ் மக்களின் இறைமை ஆகியன அந்தந்த மக்களுக்குச் சென்றடைந்தன.

எனவே சட்டரீதியில் தமிழ் மக்கள் தமக்கென ஓர் தனி அரசையும் கண்டிமக்கள் தமக்கென ஓர் அரசையும் கோட்டை மக்கள் தமக்கென ஓர் அரசையும் நிறுவும் அதிகாரமும் அவர்களுக்கு வந்தடைந்தது.

எனவேதான் சட்டத் தொடர்பற்ற காரணத்தாலும் இப்பொழுதுள்ள அரசியலமைப்புச் சட்டத்துக்குத் தமிழ்த் தேசிய இனத்தின் சம்மதம் இல்லாத காரணத்தினாலும் தமிழ்மக்கள் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டபின்பு சிங்கள மக்களாலோ அல்லது சிங்கள அரசாலோ போரிலே கைப்பற்றப்படாத காரணத்தினாலும் இப்போதைய அரசியலமைப்புச்சட்டம் சட்டப்படி செலுபடியற்றதுடன் தமிழ்த்தேசிய

(5ம் பக்கம் பார்க்க)

# ரமழான் சிந்தனைகள்

மூன்று நபர்களுடைய து–ஆ–மறுக்கப்படமாட்டாது.

1. நோன்பாளியின் து–ஆ–அவர்நோன்பு திறக்கும் வேளை.

2. நீதம் செலுத்தும் அதிகாரியின் து–ஆ

3, தீங்கிழைப் போனின் து–ஆ–

ஸஹர் முடிவு 4–23

நோன்பு திறக்கும் நேரம் 6–29

தொகுப்பு: சுல்பிக்கா–கௌது.

மயிலிட்டி

## இன்று கண்ணகை அம்மன் தேர்

வடபகுதியில் வரலாற்றுப் புகழ்மிக்க புதுமைத் தெய்வமாம் மயிலை வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மனின் வருடாந்த தேர் உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது. சித்திரத்தேரிலே அம்மன் ஆரோகணித்து வரும் காட்சி அற்புதக்காட்சியாகும்.

நாளை அம்மனின் தீர்த்தோற்சவ நடைபெறும். மறுநாள் பூங்காவனமும் அதற்குஅடுத்த நாள் தெப்போற்சவத் திருவிழாவும் முக்கிய உற்சவங்களாகும். தெப்போற்சவத்தின்போது கடல்நடுவே அமைக்கப்பட்ட அலங்காரமேடையில் வண்ணமலர்களும் வர்ண விளக்குகளும் வனப்பூட்டும் அந்த மேடையிலே கண்ணகை அம்மன் எழுந்தருளி பவனி வரும் காட்சி அற்புதகாட்சியாகும். (மா)

## இன்றுபொங்கல் விழாகாணும் மண்டைதீவு அம்பாள் ஆலயம்

இன்று பொங்கல் விழாவைக் கொண்டாடும் மண்டைதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தின் வரலாது மிகச் சுவையானது.

பல ஆண்டுகளுக்குமுன் இலங்கையிலிருந்த டாக்டர் ஒருவர் தனது பாரியாருடன் மதுரைக்குச்சென்றார். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் அருகே செம்பினால் செய்யப்பட்ட ஒருஅம்மன்திருமுகத்தை டாக்டரின் பாரியார்வாங்கித்த கொண்டார். இத்திருமுகத்தை இலங்கைக்குக் கொண்டுவந்த டாக்டர் தம்பதிகள் தமது வீட்டில்வைத்து பூசித்துவந்தனர். இவ்வாலயத்தின் ஆரம்ப கர்த்தாவான அமரர் செல்லையா குப்புச்சாமியாரும் இந்த டாக்டருடனேயே மருந்து கலப்பவராக கடமையாற்றி வந்தார். இவர்கள் மண்டைதீவில் உள்ள ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, வந்தனர். 1942ல் இவர்கள் மண்டைதீவுக்கு வந்தபோது டாக்டரின் மனைவியான அந்த அம்மையார் மண்டைதீவில் திரு. குப்புச்சாமியாரிடமே அந்த திருமுகத்தை ஒப்படைத்திருந்தார். 1942 முதல் வைத்தியசாலையின் ஒரு அறையில் குப்புச்சாமியாரால் இத்திருமுகம் வைத்து பூசிக்கப்பட்டு வந்தது, அக்காலத்தில் இத்திருமுகம் திருவுருவாகத் தோன்றி தன்னைவெளியில் வைத்துப்பூசிக்குமாறு சுவாமியாருக்கு கட்டளைபிறப்பித்தது இதனால் குப்புசாமி அவர்கள் காலஞ்சென்ற கந்தையா சபாபதிப்பிள்ளை, திரு. குழந்தை கனகரத்தினம் ஆகியோர் உட்பட ஐந்துபேருடன்சேர்ந்து இவ்வாலயம் இன்று அமைந்துள்ளஇடத்தில் சிறுஆலயமாக அமைத்து இங்கு கண்ணகி அம்பாளின் இத்திருமுகத்தை வைத்து பூசித்து திங்கள் தோறும் பூசைகளும் நடத்தி வந்தனர். இதைத்தொடர்ந்து அம்பாளின் அற்புதங்கள் பல மக்களுகு தென்படத் தொடங்கின இதைத்தொடர்ந்து மக்களின் வழிபாடும். ஆதரவும் பெருகியது. இதன்பின் குப்புச்சாமி அவர்களால் இவ்வாலயத்திற்கென இதைச்சூழ்ந்திருந்த நிலம் வாங்கப்பட்டு வருடம்தோறும் ஆலயமும் புனரமைக்கப்பட்டுவந்தன. இதற்கு முதல்முதலில் தர்மகர்த்தாசபை அமைக்கப்பட்ட போது இதன்முதலாவது தலைவராக அமரர் நா. கி. தனஞ்செயன் கடமையாற்றினார்.

- சக்திபாலன்.

யாழ். மாநகராட்சிமன்றக் காணிகளில்

# சட்டவிரோதமாக வீடுகளைக் கட்டியவர்கள்மீது சட்டநடவடிக்கை

## சபைக் கூட்டத்தில் காரசாரமான விவாதம்

[ஏ. வி. மாணிக்கம்]

யாழ். மாநகராட்சி மன்றத்துக்குச் சொந்தமானகாணிகளில் சட்டத்துக்கு விரோதமான வீடுகள் கட்டியிருப்பவர்கள் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் அக்கட்டிடங்களை இடிக்கவேண்டுமென்றும் யாழ். மாநகராட்சி மன்றம் முடிவு செய்துள்ளது.

இந்த விவாதம் மன்றப் பொதுக்கூட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது ஒரு கட்டத்தில் திரு. என். டி. செல்லத்துரை மாநகராட்சிமன்ற உறுப்பினர் ஒருவரும் மன்றக்காணியில் கட்டிடம் கட்டியிருப்பதாக குறிப்பிட்ட பொழுது, துணை முதல்வர் திரு. எம். அலோசியஸ் குறுட்கிட்டு யார் அந்த உறுப்பினர்? பெயரைச்சொல்லுங்கள் என்றதும் விவாதம் சற்று சூடேறத் தொடங்கியது.

திரு. யோ. அ. செல்வநாயகம் யார் அந்த அங்கத்தவர்? பெயரைச் சொல்லுங்கோ என்று ஆவேசத்துடன் கேட்டார். முதல்வர் இராசா விசுவநாதன் பெயர் சொல்லவேண்டாம்; அங்கத்தவர்கள் சட்டத்துக்குமாறாக நடக்காமலும் உடந்தையாக இருக்காமலும் பொதுமக்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

யாழ் மாநகரசபைமாதாந்த பொதுக்கூட்டம் யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் அண்மையில் கூடியபோது டாக்டர் ஏ. எல். ஏபிரகாமும், திரு. யோ. அ. செல்வநாயகமும் குருநகர்ப்பகுதியில் வீட்டுத்திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளுக்கு வரிமதிப்பீடு செய்வது குறித்து பிரச்னை கிளப்பினார்கள். இதுசம்பந்தமான விவாதம் முடிவடைய அதிக நேரம் சபைக்கு எடுத்தது.

டாக்டர் ஏபிரகாம் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

''றெக்கிளமேசன் வீட்டுத் திட்டத்தை மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றார்கள். அது இப்போது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சில வீடுகளுக்கு நுழைவாசலில்லை; பின்பக்க வாசலில்லை; கிணறு சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. 5 ரூபா வாடகைக்கு கொடுத்துவிட்டு, அதிக வரி கேட்கிறோம். நான் ஒரு வீட்டை விற்று விட்டால் நான் தான் தொடர்ந்தும் வரி கட்ட வேண்டியிருக்கிறது. வீட்டு உரிமையாளரை அறிந்து சோலைவரி அறவிடவேண்டும். சில வீட்டுக்காரருக்கு இன்னமும் உறுதி வழங்கப்படவில்லை'.

### சட்டவிரோத வீடுகள்

''சிலர் சட்டவிரோதமாக வீடுகள் கட்டியிருக்கிறார்கள். இவர்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குருநகர் மக்கள் சோலைவரி கட்டமாட்டார்கள்.

திரு. தம்பு கந்தையா: ''1981லிருந்து வரிஅறவிடவேண்டும். வரி அறவிடுவதில் சில பிழைகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ஆரம்பத்திலிருந்தே நடவடிக்கை எடுத்திருந்தால் பிரச்னை ஏற்பட்டிருக்காது. இப்பொழுதும் சட்டவிரோதமாக வீடுகள் கட்டப்படுகின்றன. இதை விளக்கமாகக் கூறினால் பல சிக்கல்கள் வரும். இது விஷயம் ஆணையாளருக்கும் தெரியும்.

திரு, செல்வநாயகம்: விதிமுறைப்படி வீட்டு மதிப்பு போடவேண்டும்.

உதவிமுதல்வர் திரு. எம். அலோசியஸ்: மதிட்பீட்டாளர் திட்டம் சேரிஒழிப்புத்திட்டம் அத்துமீறிக் குடியேறியவர்களுக்கு மின்சாரம், சுகாதாரம் இலவசமாக வழங்க முடியாது.

முதல்வர் திரு.விசுவநாதன்: சட்ட விரோதமாக குடியேறியவர்களுக்கு உடந்தையாக அங்கத்தவர்கள் நடக்கிறார்கள் என்பதற்கு - இடமில்லாமல் உறுப்பினர்கள் செய்துகாட்ட வேண்டும். சட்டத்துக்குமுன் அனைவரும் சமம். இதுவிஷயத்தில் அங்கத்தவர்கள் ஒத்துழைக்கவேண்டும்,

திரு. அலோசியஸ்: சட்டத்துக்கு விரோதமானமுறையில் கட்டப்பட்ட கட்டிடங்களை இடியுங்கள்.

முதல்வர்: இதற்கு ஒத்துழைப்புத்தாருங்கள்.

திரு. என். டி. செல்லத்துரை: மாநகரசபைஏற்கனவே நடவடிக்கை எடுத்திருந்தால் இப்பிரச்னை ஏற்பட்டிருக்காது. அத்துமீறிக் கட்டிய வீடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இச்சபையின் குருநகர் அங்கத்தவர் பெயரில்கூட வீடு இருக்கிறது.

திரு.அலோசியஸ் யார் அந்த அங்கத்தவர்?

முதல்வர்: அங்கத்தவர் பெயர் சொல்லவேண்டாம்.

திரு. யோ. அ. செல்வநாயகம் (ஆவேசமாக) குறிப்பிட்ட அங்கத்தவர் யார்? குருநகரைச் சேர்ந்தவர் என்று சொல்லாமல் பெயரைச்சொல்லவும்.

திரு. என். டி. செல்லத்துரை: சட்டவிரோதமாக கட்டியவர் நாங்கள் தான் என்று ஏற்றுக்கொள்ளாமல் கோவிக்கிறார்கள். நானறிந்தமட்டில்உறுப்பினர் ஒருவருக்கு இருந்த காணியை இன்னொருவருக்கு எழுதியதாக நீதிமன்றம்வரை யோயிருக்கிறது. இதை அரசியல் கண்ணோட்டத்தில் பாராமல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. யோ. அ. செல்வநாயகம்: எல்லைக்குள் அனுமதியுடன் கட்டினால் அதற்கு வரி அறவிடலாம்.

திரு.என். டி. செல்லத்துரை சபைக்குரிய நிலத்துக்கு அனுமதி வழங்க முடியாது.

டாக்டர் ஏ எல். ஏபிரகாம் இனிமேல் சட்டவிரோதமாக கட்டினால் நடவடிக்கைஎடுக்க வேண்டும்.

திரு. யோ. அ. செல்வநாயகம்: மாநகரசபைக் காணிகள் தவிர அரச காணிகளுக்கும் வரி அறவிடவேண்டும்.

### மின்சார சீர்கேடு

யாழ். மாநகரசபையில் மின்சாரச் சீர்கேடுபற்றி விவாதிப்பது அடிக்கடி நடைபெறும் சம்பவமாகிவிட்டது பல கூட்டங்களில் அங்கத்தவர்கள் மின்சார நிலைமைபற்றி பல விதமான கருத்துக்களையும், குறைபாடுகளையும் சுட்டிக் காட்டியும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. இது விஷயம் முதல்வருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வருகிறது.

இக் கூட்டத்தில் திரு ஆ. துரைராசசிங்கம் மின்சார சீர்கேடு குறித்து பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்த போது. பல உறுப்பினர்கள், மின்சார பொறியியலாளர், ஊழியர்கள் மீதும் முதல்வர்மீதும் குற்றம்சுமத்திகாரசரரமாகப்பேசினர். பிரேரணைவிபரம் வருமாறு:

திரு. ஆ. துரைராசசிங்கம்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லை தவிர்ந்த ஏனையபாகங்களில் மின்சாரவெளிச்சங்கள் முன்னிருந்தமாதிரி எதுவித மாற்றமுமில்லாமல் எரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மாநகரசபை எல்லைக்குள் வீதி வெளிச்சவசதி 75 வீதம் குறைக்கப்பட்டிருக்கிறது தற்சமயம் லக்சபான நீர்த்தேக்கத்திட்டத்தில் நீர்மட்டம் திருப்தியாக விருப்பதால் முன்னரைப்போல மாநகரசபை எல்லைக்கும் எல்லாத்தெருக்களிலும் விளக்குகள் எரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. தம்புகந்தையா: மின்சாரபொறியியலாளர் தனித்து இயங்குகிறாரா? அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டுகின்ற விஷயங்கள் ஒன்றும் இச்சபையில் செயல்படுவதாயில்லை. வரியிறுப்பாளர்களுக்கு நாங்கள் என்ன பதில் சொல்வது? பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் இச்சபையில் இருக்கிறார்களா? கடமையைச் செய்யவில்லை என்றால் ஏதோ தகுதியீனம் இருக்கவேண்டும். செயல்படவில்லை என்றால் நாங்கள் சபையில் இருப்பதில் பயனில்லை.

திரு. என். டி. செல்லத்துரை: மதிப்பீடுசெய்து காசு கட்டியவர்களுக்குத் தடியில் லையிட் வழங்கப்படுகிறது வீதியோர லைட்டுகள் அணைக்க ஆளில்லாமல் இரவுபகலாக எரிந்துகொண்டிருக்கிறது.

திரு எஸ். தியாகராசா: எனது வீட்டுக்கு மின்னிணைப்பு வழங்கி இரு வருஷமாகியும் மரக்கப்பில்தான் மின்சாரம் பொருத்தப்பட்டிருக்கிறது. எங்களுக்கு அப்படியென்றால் சதாரண வரியிறுப்பாளர்களுக்கு எப்படியிருக்கும்?

திரு. செல்வநாயகம்: ஊழியர்கள் ஒத்துழைபில்லை என்று பொறியியலாளர் சொல்கிறார்.


திரு. முத்தையா: மூட்டை குத்துகிறமாதிரி குத்தினால் தான் காரியம்பெறக் கூடியதாயிருக்கிறது.

டாக்டர் ஏ எல். ஏபிரகாம்; மூன்றுகிழமையாக மீட்டர் திருத்தப்படாமலிருக்கிறது. குறைகள் எங்கிருந்தாலும் முதல்வர்தான் பொறுப்பேற்கவேண்டும். இனிமேலாவது சீர்கேடுகள் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

முதல்வர் திரு. விசுவநாதன்; அடுத்த கூட்டத்தில் இது சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிக்கின்றேன்.

### பாராட்டு

யாழ், மாநகரத்தில் பொது மக்கள் இடைஞ்சல் இல்லாமல் நடமாடுவதற்கு போக்குவரத்து வசதிகளைச் செய்தமைக்கு பொலிசாருக்கு, முதல்வர் பாராட்டுத் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் 'விமாக்கி' ஸ்தாபன உரிமையாளர் திரு, மார்க்கண்டு கிரிதரனுக்கு ஜே. பி. பட்டம் வழங்கப்பட்டதைக் கௌரவிக்குமுகமாக மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடந்த பாராட்டு விழாவில் எடுக்கப்பட்ட படம். முதலியார் மகேசன் தலைமையில் இப்பாராட்டுவிழா நடந்தது.

## இலங்கை...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இனத்தையும் கட்டுப்படுத்தாது.

மிக நுணுக்கமாக ஆராயும் பொழுது இலங்கைத் தமிழரின் கோரிக்கை ஒரு பிரிவினைக் கோரிக்கை என்று கூற முடியாது. இரண்டு நாடுகளை [அதாவது தமிழ் ஈழம், ஸ்ரீலங்கா, ஆகியவற்றை) தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஒன்றிணைப்பதையே தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள். எனவே இலங்கைத் தமிழரின் பிரச்னையை ஓர் உள்நாட்டுப் பிரச்னை என்றும் கருதமுடியாது.

இந்நிலையில் தமிழ் மக்களுக்குள்ள வழி ஒன்றே ஒன்றுதான். அதாவது தமிழ் மக்கள் சட்டரீதியில் மீண்டும் பெற்ற இறைமையைப் பிரயோகிப்பதேயாகும்.

1977-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் இந்த முடிவை எடுத்துள்ளார்கள். இதனைத் தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுதிரண்டு செயல்படுத்தவேண்டும். இதனை பாராளுமன்றம் மூலம் மட்டும் செயற்படுத்த முடியாது என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

தேர்தலில் ஈடுபடாததும் பல்வேறு தொழில்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டுள்ளதுமான ஒரு விடுதலை இயக்கத்தையே அமரர் 'திரு' கருத்தில்கொண்டிருந்தார். அவர் அதனைச் செயல்படுத்துமுன்பதாக எம்மைவிட்டுப் பிரிந்தது தமிழ் மக்கள் துரதிஷ்டமே ஆனாலும் அவர் காட்டிச் சென்ற பாதையைப்பின்பற்றி நாம் மீண்டும் பெற்ற இறைமையை எமது நடத்தைகளினால் இழந்துவிடாது பேணிக் காத்து விடுதலையடைவதே தமிழ் மக்களுக்குள்ள ஒரே வழி.

## வெற்றிதோல்வியை போதிக்கிறது

(யாழ்ப்பாணம்)

''விளையாட்டினால்தான் ஒருவன் அன்பு, பண்பு போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். வெற்றி தோல்வியைச் சகிக்கும் மனப்டான்மையையும் உருவாக்கிக்கொள்ளலாம்''

என்று தொழிலதிபர் திரு. இ. துரைராஜா உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டிக்கு தொழிலதிபர் திரு. இ. துரைராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. தங்கராசா சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார்.

போட்டியில் வெற்றி பெற்றோருக்கு திருமதி இ துரைராஜா பரிசில்களை வழங்கினார். தர்மன் இல்லம் முதலாமிடத்தையும், நகுலன், பீமன், அருச்சுனன் ஆகிய இல்லங்கள் முறையே இரண்டாம் மூன்றும், நான்காம் இடங்களையும் பெற்றுக்கொண்டன.

[கி]

# "தொழிற்சங்கங்களின் வளர்ச்சியில் தளர்வு"

## கோப்பாய் எம். பி. கவலை

(யாழ்ப்பாணம்)

''கடந்த 1980ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தத்தின் பின் தொழிற்சங்கங்களின் வளர்ச்சி, நடவடிக்கை தளர்வடைந்தநிலையில் உள்ளது. அரசாங்கம் தமக்குச்சார்பான தொழிற்சங்கங்கட்கு சலுகைகள் அளிப்பதன் மூலமாக வளர்த்துவரும் அதேவேளை ஏனைய தொழிற்சங்கங்களின் வளர்ச்சியை மட்டம்தட்டிவருகிறது. தேசிய தொழிற்சங்கங்கள் பலவும் தமிழ் தொழிலாளரின் உரிமைகள் தொடர்பாக குரல் கொடுக்க பின்னிற்கின்றன.''

இவ்வாறு கோப்பாய் எம். பி.யும் தமிழ் தொழிற்சங் கூட்டணியின் தலைவருமான திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் 17வது ஆண்டு நிறைவு மாநாட்டில் விசேட விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கூறியதாவது: தொழிற்சங்கங்கள் இன, மொழி அடிப்படையில் ஒன்றிணைந்து பணிபுரிதலை குறுகிய கண்ணோக்கு எனச் சொல்பவர்கள் கடந்த காலங்களில் தேசிய ரீதியில் இயங்கிய தொழிற்சங்கங்களின் தமிழ்தொழிலாளர் தொடர்பான அணுகுமுறையை அவதானித்தால் உண்மைதெரியுமென்றார்.

1956ம் ஆண்டில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் மொழிவழிபிரிந்து முன்னோடியாக ஏனைய தொழிற்சங்கங்கட்கு வழிகாட்டியது. இன்று 1982ல் நிலைமைகளோ மிக வேறுபாடாயுள்ளது. தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்ட நிலைதற்போது நாட்டில் நிலவுகிறது. தமிழ் தொழிலாளர்கட்கு நியமனம் வழங்குவதில் காட்டப்படும் பாரபட்சம், புறக்கணிப்பு தொடர்பாக நாம் ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டதையடுத்தே மாவட்ட ரீதியில் தொழில் வாய்ப்பை வழங்கும் முறையை பெறமுடிந்தது.

மாநாட்டின் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளரும், தமிழ் தொழிற்சங்க கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. த. மகாசிவம் கலந்துகொண்டார். (கி

## நிர்வாகிகள்

(சங்கானை)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு: தலைவர்: திரு. க. ச. கந்தசாமி, உபதலைவர்: கா. கந்தசாமி, செயலாளர்: தி. விஜயசிறி, உபசெயலாளர்: க. இராசேந்திரம், பொருளாளர்: எம். கதிரவேலு.

அமரர் வி. செல்லையாவின் மறைவையொட்டி அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு அன்னாரின் குடும்பத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## முத்திரை வெளியீடு

(பண்டத்தரிப்பு)

கொழும்பு வை. எம். சி. ஏயின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சு வெளியிட்ட புதிய 2 ரூபா 50 சத முத்திரையின் வெளியீட்டு வைபவம் பண்டத்தரிப்பு (வை எம். சி. ஏ. கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினரால் பண்டத்தரிப்பு தபால் நிலையத்தில் கொண்டாடப்பட்டது. பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. சார்பில் புருணை நாட்டின் ரோட்டரிக் கழகத் தலைவர் திரு. எஸ். இராஜேந்திரா முதல் முத்திரையை பண்டத்தரிப்பு தபால் அதிபர் திரு, சரவணமுத்துவிடமிருந்து பெற்றுக்கொண்டார். வை, எம். சி. ஏ. தலைவர் வணக்கத்துக்குரிய கே. மனோபவன், செயலாளர் ஆசிரியர் எஸ். இரத்தினவேல் உட்பட மற்றும் பலர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்

## ஆங்கிலமொழித் தினம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் ஆங்கிலமொழித் தினம் கல்லூரி அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.


T. V. ஏரியல் அமைப்பில்

முதன்மைமிக்க ஸ்தாபனம்

சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை

T V யில் சிரமமின்றி பார்க்க

உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.

நொடிப்பொழுதில், T V ஏரியல்

கோளாறுகளை சரி செய்யலாம்.

எமது பராமரிப்பு சேவை

24 மணி நேரம் செயல்படுகின்றது

சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்

எடுப்பதற்கு

குறைந்த கட்டணம்

பல்வேறு TV செட்டுகளை

பிரின்ஸ் வசதியுடன் பெறலாம்.

வீனஸ்

றெக்கோடிங்

றேடியோ வாச் வேக்ஸ்

ஸ்ரீதர் தியேட்டர் முன்,

யாழ்ப்பாணம்.


## தற்கொலை

(புங்குடுதீவு)

தாய் தந்தையருக்கிடையே ஏற்பட்ட மனக்கசப்பை தீர்த்து வைக்க முயன்று தோல்விகண்டதனால் இளம் பெண் ஒருவர் நஞ்சருந்தி மரணமானார். இப்படி மரணமடைந்தவர் புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைச்சேர்ந்த ந. சாந்தினி [20-வயது] என்பவராவார். இவரது மரணம் தொடர்பாக பதில் மரண விசாரணை அதிகாரி ப. கதிரவேலு மரணவிசாரணை நடத்தினார் இவ் விசாரணையின்போது இறந்தவரின் தயாரான சனசம்மா (45-வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இறந்தவர் எனது மூத்த மகள் அவர் கடந்த இரண்டு வருடகாலமாக எனது மைத்துனி ஒருவரின் வீட்டில் தான் வசித்துவந்தார். சம்பவதினம் எனக்கும் எனதுகணவருக்கும் இடையில் சிறிது சச்சரவு ஏற்பட்டது. இதைஅறிந்த மகள் வீட்டிற்கு வந்து எம்மை சமரசப்படுத்தமுயன்றார் ஆனால் மதுபோதையில் இருந்த எனது கணவர் மகளையும் ஏசிவிரட்டினார். இதனால் மனமுடைந்து தமது இருப்பிடம் நோக்கி சென்றுவிட்டார். சிறிது நேரத்தில் அவர் நஞ்சருந்திவிட்டதாகத் தகவல் கிடைத்தது உடனே நாம் அவரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும்வழியில் மரணமானார்'' என்றார்.

பிரேத பரிசோதனையை புங்குடுதீவு பிரதம வைத்திய அதிகாரி நடாத்தினார். முடிவில் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

## யாருடையது?

திறப்புக்கோர்வை யொன்று கண்டி வீதி செம்மணிப்பாலத்திற்கு அருகாமையில் கண்டெடுத்து கைதடி நுணாவிலைச் சேர்ந்த வ. சோதிலிங்கம் என்பவர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர்காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## அடையாள அட்டை

பெரியதம்பனை, மடுக்கோயிலை வதிவிடமாகக் கொண்ட ஒருவரின் அடையாள அட்டை, யாழ். பரியோவான் கல்லூரிக்கு முன்னுள்ள பிரதான வீதியில் பரி.யோவான் கல்லூரி மாணவர் எஸ். ஹரிச்சந்திரனால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனைத்தவறவிட்டவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## ரூ. 4 லட்சம் செலவில் தேர் அமைக்க நடவடிக்கை

[புங்குடுதீவு]

புங்குடுதீவின் புராதன ஆலயங்களில் முதன்மைமிக்கதான பாணாவிடைச்சிவன் தேவஸ்தானத்திற்கெனப் புதிய சித்திரத்தேர் ஒன்றை நான்கு லட்சம் ரூபா செலவில் அமைப்பதற்காக நிதிசேகரிக்கும் வேலைகள் தற்போது நடைபெறுகின்றன

இத்தேர் நிர்மாணவேலைகளுக்குப் பொறுப்பாக சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் தலைமையில், ஆசிரியர் திரு. ந இராசதுரை, டாக்டர் ஆ பேரின்பநாதன் பொறியியலாளர் அ. குணபாசிங்கம், திருவாளர்கள் வ. வே. இளையதம்பி ம. பாலசிங்கம் கா. கந்தசாமி, செ. உதயகுமார், பொ. வைரமுத்து ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இத்திருப்பணிக்கு புங்குடுதீவு மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்குத்திறக்கப்பட்டுள்ளது.

பல பொதுஸ்தாபனங்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் இந்நிதிக்குப் பணம் சேகரிக்க முன்வந்துள்ளனர். (அ)

## சங்குப்பிட்டி-மன்னார்வீதியில் மினிபஸ் கொள்ளை முயற்சி

(மன்னார்)

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கி வந்த மினிபஸ் ஒன்றைவழிமறித்துக்கொள்ளையடிக்க எடுத்தமுயற்சிதோல்வியடைந்தது.

எருக்கலம்பிட்டிப்பகுதியைச் சேர்ந்தவருக்குச் சொந்தமான மினிபஸ் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8-15 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிவந்துகொண்டிருந்தது.

அப்போது பாலமடு என்ற இடத்தில் வீதியின் குறுக்கே 3 மரக்கட்டைகள் போடப்பட்டிருந்தன. மினிபஸ் வழிமறிக்கப்படுவதற்காகவே வீதியின் குறுக்கே மரக்கட்டைகள் போடப்பட்டுள்ளது என நினைத்த சாரதி வீதி ஓரமாக வாகனத்தைச் செலுத்த முயற்சித்தபோது திடீரென துப்பாக்கியால் மினிபஸ்ஸை நோக்கிச்சுடப்பட்டது. உடன் சாரதி மிகவும் சாதுரியமாக மினிபஸ்ஸைச் செலுத்திக்கொண்டு மன்னாரை வந்தடைந்து மன்னார் பொலிசில் புகார்செய்தார்.

இம்மினிபஸ்ஸில் சாரதி உட்பட 5 பேர் மட்டுமே பிரயாணம்செய்தனர்.

துப்பாக்கியால் சுட்டதில் மினிபஸ் சிறிது சேதமுற்றிருந்தது.

இப்புகாரையடுத்து மன்னார் பொலிசார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

மினிபஸ் மன்னார் பொலிசாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## வட்டக்கச்சி வி. கழகம் கேடயம் பெற்றது

[கிளிநொச்சி]

கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வட்டக்கச்சி விளையாட்டுக்கழகமும் உருத்திரபுரம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் பங்கு பற்றின.

கிளிநொச்சி பொலிஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் வட்டக்கச்சி விளையாட்டுக் கழகம் 14-12 புள்ளிகளால் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தை வென்று சங்கத்தின் 10-வது ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இவ்விழாவை முன்னிட்டு இச்சங்கம் நடத்திய கயிறு இழுத்தல் போட்டியில் ஆயிரம் ஏக்கர் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கக் கிளையும் தாச்சிப் போட்டியில் கிளிநொச்சி திடீர் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றன. கூட்டுறவுச்சங்கங்களுக்கிடையே நடத்தப்பட்ட மற்றுமொரு கயிறு இழுத்தல் போட்டியில் பரந்தன் கூட்டுறவுச் சங்கம் வெற்றி பெற்றது. (அ)

## மெய்வல்லுநர் போட்டி

[பண்டத்தரிப்பு]

அராலி சரஸ்வதி மகாவித்யாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மகாவித்தியாலய அதிபர் திரு. எம். திருநீலகண்டசிவம் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக வட்டுக்கோட்டை தொகுதி எம்.பி. திரு. தா. திருநாவுக்கரசு கலந்துகொண்டார் பரிசுகளை திருமதி கலைமகள் திருநாவுக்கரசு வழங்கினார்.

## கம்யூனிஸ்கட்சி 34-வது ஆண்டு நிறைவுவிழா

[யாழ்ப்பாணம்]

இலங்கைகம்னிஸ்கட்சியின் 34 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நாடெங்கும் கருத்தரங்குகள், பொதுக் கூட்டங்கள் நடாத்த ஏற்பாடாகியுள்ளது. இதுசம்பந்தமாக நிதிசேகரிக்கும் பணிகளிலும் கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர்கள் ஈடுபடவுள்ளனர் யாழ். மாவட்டத்திலும் நிதி சேகரிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [மா]

## நினைவு அஞ்சலி



## செல்லையா ஆசிரியர்

தனக்கென வாழாது பிறர்க்காக வாழ்ந்து பிறர் நல்வாழ்வில் இன்பம் கண்ட ஏழைகள் தோழனும் சமூகத் தொண்டரும் பழுத்த சமய பக்தருமான பண்பிற்கும் மதிப்பிற்கு முரிய திரு. செல்லையா ஆசிரியர் எம்மை விட்டுத் திடீரென மறைந்து இன்று ஒரு மாதமாகிறது. அன்னாரது மறைவு அவரது குடும்பத்தினர்க்கு மட்டுமல்லாது தான் பிறந்த புகுந்த இடங்களில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும்.

தலைமை ஆசிரியராகக் கடமை புரிந்து ஏழைச்சிறார்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறையோடும் சிரத்தையோடும் அளப்பரிய சேவைபுரிந்ததோடு சங்கானைப் பட்டின சபையின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்கானை வாழ் மக்கள் அனைவருக்கும் சிறப்பான சேவை புரிந்தார். அவருடைய சேவைகளை நினைவு படுத்தும் வகையில் அவர் நிலையான பல பொதுப்பணிகளை செய்து நிறைவேற்றி வைத்துள்ளார். அவர் பிறர்க்கென வாழ்ந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டாக தனக்கு உரிமையாக இருந்த ஒரேயொரு காணியை விளையாட்டு மைதானம் நிறுவுவதற்காக சங்கானை பட்டின சபைக்கு கொடுத்துதவினார். அன்னாரது மறைவு அவரது குடும்பத்தினர்க்கு மட்டுமல்லாது சகல மக்களுக்கும் குறிப்பாக ஏழை மக்களுக்கு ஓர் பேரிழப்பாகும் சங்கத்தின் சார்பில் எமது உருக்கமான அனுதாபத்தை அன்னாரது குடும்பத்தினர்க்கு தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுகின்றோம்.

சங்கானை கி.அ. சங்கம்

# நெஞ்சு பொறுக்குதில்லை

'ஷர்மினி'

இருப்பது ரூபா காசு ஒரு நாளைக்கு உழைப்பதற்கு எத்தனை பேர் எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள்!

—அப்படி உழைத்தாலும், பெரியகுடும்பத்திற்குச் 'சோறு' போட முடியாமல், சாப்பிட்டும், சாப்பிடாமலும் 'அரைப் பட்டினி'களாக வாழ்பவர்கள் எத்தனை பேர்!

இந்தக் கஷ்டங்களையெல்லாம் சகித்துப் பொறுத்து இங்கேயே தொடர்ந்து வாழச் சக்தியற்றவர்கள், வெளிநாடு போய் 'திரவியம்' தேட முனைகிறார்கள்; அதில் தவறுமில்லை!

ஆனால் அந்த அப்பாவிகளைப் பயன்படுத்தி ஒரு கூட்டம் இங்கே நோகாமல் சுளைசுளையாகப் பணம் சேர்த்து சுக போக வாழ்வு வாழும் 'பொறுக்கி'த்தனத்தைத்தான் பொறுக்கமுடியவில்லை!

மூலைமுடுக்கெல்லாம் ஆட்களை வெளிநாட்டுக்கு அனுப்புகிற ஏஜென்டுகள்! புதிது புதிதாக முளைக்கிறார்கள்!

கொஞ்சநாள் போனதும், வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புவதாகக் கூறிப் பணம்சேர்த்த ஆசாமி 'கொண்டாவில்' பவனிவருவார்! காதிலும் கழுத்திலும் இருப்பதை விற்றும், அடைவு வைத்தும் கொடுத்தவர் நடையாக அவர் வீட்டுக்கு அலைந்து திரிவார் கடைசியில் நம்பிக்கை இழந்து, விரக்தி அடைந்து, கடனை அடைக்கமுடியாமல் திண்டாடுவார். அதற்குள் பணம் கறந்தவர் பங்களா கட்டியிருப்பார்!

சிலர் இந்த நாட்டுச் சட்டத்தின் கரங்களில் சிக்கியிருக்கிறார்கள்! ஆனால், பலர் தமது 'கைவரிசை'யைத் தொடர்ந்து காட்டிக்கொண்டேயிருக்கிறார்களே!

உள்ளூரிலே வேலை பெற்றுக் கொடுத்தும், கொடுப்பதாகவும் கூறி பணம் சம்பாதித்து பெரிய புள்ளிகளாக மாறியவர்களை நாம் மறக்கவில்லையே!

காலத்துக்குகாலம் 'நிறங்களை' மாற்றிக்கொண்டு செயற்படுகிற இவர்களது தொழில் சற்றுக்கஷ்டமானது இங்கேயே தொழில் பெற்றுக் கொடுப்பதாகக்கூறி, 'கயிறு விடுகிற' பட்சத்தில் மாட்டிக் கொள்வது சுலபமாகிவிடும்.

ஆனால் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு விஷயம்சற்றே 'பரந்த' மனப்பான்மையுடையது.

தலைநகருக்குப் போகத் தேவையில்லை. —உள்ளூரிலே திடீர் திடீரெனவெளி நாட்டுக்கு ஆட்களை அனுப்புகிற 'புள்ளிகளை' நீங்கள் சந்திக்கலாம்.

உண்மையாகப் பதிவு செய்யப்பட்ட ஆட்களை அனுப்பும் ஏஜென்சிகளின் எண்ணிக்கையே அரசு குறைத்திருக்கிறது! ஆனால் ஆட்களை அனுப்புவதாகச் சொல்லும் தனிப் பட்ட 'ஏஜெண்டுக்கு ஏஜெண்டுகள்' அதிகரித்துக்கொண்டே வருகிறார்கள்.

கொழும்பிலிருந்து ஒருவர் இங்கு மாதம் ஒரு தடவை வந்து சிங்கப்பூருக்கு ஆட்களை அனுப்புவதாக சுமார் ஐம்பது இளைஞர்களிடம் பெரிய தொகையை 'அட்வான்ஸா'கப் பெற்றுச்சென்றார்,

அடுத்த மாதம், அடுத்த மாதமென்று ஓராண்டுக்கு மேல் சென்றுவிட்டது! சிங்கப்பூர் அரசு 'வேலைக்கான பெர்மிட்டுக்களை'யே நிறுத்திவிட்டது.

முதுகு எலும்புகளை எண்ணப் புறப்பட்ட இளைஞர்களுக்கு அந்தப் பேர்வழி தன் இடத்தை மாற்றிக் கொண்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனாலும், சில இளைஞர்களிடம் அவர் வகையாக மாட்டிக்கொண்டு, வாங்கிக் கட்டியதோடு, கொஞ்சக் காசையும் திருப்பிக்கொடுத்தாராம்!

கஷ்டப்பட்ட இளைஞர்கள், அந்தத்தொகைகளை எப்படித் தான் கஷ்டப்பட்டு எடுத்திருப்பார்களோ?

சமீபத்தில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் ஒரு நிறுவனத்துடன் தொடர்புள்ள ஒருவரைச் சந்தித்தேன்.

இரண்டுலட்சத்துக்கு நல்ல இடத்தில் வீடொன்று வாங்கியிருக்கிறார். மனைவி மக்களுடன் எங்குபோனாலும் டாக்ஸியில்தான் போகிறார்.

''ஒரு கார் வாங்க வேண்டும். வீடு வாங்கியதுபோல 'நோகாமல்' உழைத்து வாங்க முடிந்தால், விரைவில் வாங்கிவிடுவேன்!''

நொந்து பெறுகிற காசை நோகாமல் உழைக்கிற பேர்வழிகள் இருக்கிறவரை இந்த நாட்டு இளைஞர்களும், இந்த நாடும் எப்பதான் முன்னேறப் போகிறதோ?

வெளிநாட்டு வேலை கிடைக்கும் என்ற ஆசையில், இந்த நாட்டில் ஒரு முயற்சியிலுமே ஈடுபடாமல, காலத்தைக்கழித்துக்கொண்டிருக்கிற இளைஞர்கள் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டும்.

பெற்றோர்கள் எப்பொழுதுமே விழிப்பாக இருந்து கொள்ளவேண்டும்!

## இந்தநாடு ஆழிக்குமரனை மறந்துவிட்டதோ?

நம்பமுடியவில்லை; ஆனாலும் நடந்துவிட்டது!

ஊன்று கால்களின் உதவியுடன் என் அருகே வந்த அவரைப்பார்க்கக் கவலையாகத் தான் இருந்தது,

தொந்தி விழுந்திருந்தது—பத்து மாதத்துக்கு மேலாக படுக்கையிலேயே தொடர்ந்து இருப்பதனால் அப்படி இருக்கலாம்.

மிகக் கட்டையாகத் தலைமயிர் வெட்டியிருந்தார். இடையிடையே நரை தட்டியிருந்தது.

மணிக்கணக்காகநீச்சலடித்து ஆடிப்பாடி ஓடி ஆடிக்கொண்டிருந்த சாதனை வீரனுக்கா இந்தநிலை!

ஆழி குமரன் ஆனந்தனைச் சமீபத்தில் பம்பலப்பிட்டி ஹில்டன் ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன்.

தனது வீட்டு ஒழுங்கையிலேயே மோட்டார் சைக்கிளைத் தள்ளி ஓடவைக்க முயன்றபோது, எதிராக வந்த கார் மோதி, தூக்கி எறியப்பட்டு சாவோடு போராடி, அவர் இப்போது உயிரைமட்டும் பிடித்துக் கொண்டிருப்பது வாழ்வது பழையகதை.

தமிழ்நாட்டில் சாதனை செய்துவிட்டு இங்கு வந்த கையோடு இந்தக் கோர விபத்து நடந்தது!

ஒரு காலும் இடுப்பும் சேருகின்ற இடத்தில் எலும்புகள் முற்றாக நொருங்கிவிட்டதால் வெள்ளித்தகடுகளை வைத்து பொருத்தியிருக்கிறார்கள்வைத்திய நிபுணர்கள்!

பழைய நிலைக்கு அந்தக்கால் வருமா, வராதா என்று சொல்ல முடியாது! ஐம்பது வீதம் மட்டும் நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள் டாக்டர்கள்.

இன்னும் அந்த நம்பிக்கை ஆனந்தனுக்கு வரவில்லை.

மானுகத்துள்ளித்திரிந்தவர், படுக்கையிலே கழிக்கிறார்.

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரை சென்று, மீண்டும், அங்கிருந்து இங்குவரை நீச்சலடித்த போது அவருடன்கூடச் சென்றுஅவர் சுறுசுறுப்பைஅவதானித்திருக்கிறேன்.

அதன் பின்னர் அவர் அடுத்தடுத்துச் செய்த சாதனைகளின் போதும் கூடஇந்திருக்கிறேன்.

இப்போது அவர் இப்படி ஒரே இடத்தில்தாடியும் கோலமுமாக இருப்பதைப் பார்க்கும் பாது 'மீண்டும் ஆழிக்குமரன் ஆனந்தன்' என்ற செய்திவராதா என்று எண்ணிய எனது சிந்தனையை அவர் கலைத்தார்.

''நீச்சலடிக்க முடியாதவனுகலாம். ஆடிஓடமுடியாதவனுகலாம். எனக்கு எது யமனுகவரப்பார்த்ததோ, அந்த மோட்டார் சைக்கிளில் ஒடிச் சாதனை செய்வேன். இரவு பகலாக விடாது ஓடிப் புதிய சாதனையைச் செய்வேன். அத்தோடு மோட்டார் படகு சம்பந்தமான சாதனையையும் செய்வேன்!''

—ஆனந்தனது உடலில் தான் சாயம்; மனதில் இல்லை.

அவர் மனம்மட்டும் உறுதியாகத்தான் இருக்கிறது.

---


ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—ஜெயசுதா
பந்தாட்டம்

ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 4காட்சிகள்
கடைசி வாரம்
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 2-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
3-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
மோகனப் புன்னகை
(கலர்)

Windsor (Jaffna) 2nd Crowded Week
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான
கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
7-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—


## போயாதினத்தையொட்டி இன்று சினிமாக்காட்சி இல்லை

---

★ மீன் கொள்வனவு விற்பனைக்கு

# ரூ.6லட்சம்செலவில் குளிரூட்டப்பட்ட வாகனம்

(புலோலி)

''மீனவர்களின் நன்மை கருதி கனேடிய ஸ்தாபனமொன்றின் உதவியுடன் 6லட்சம் ரூபா செலவில், மீன் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்வதற்கென குளிரூட்டப்பட்ட வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேறினால் மீனவர்கள் பலத்த நன்மையடையார்கள்.''

இவ்வாறு பருத்தித்துறை கிழக்குப் பகுதி செம்பியன்பற்று உப-அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற மினிக் கச்சேரியில் உரையாற்றிய யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு.எஸ்.சிவதாசன் குறிப்பிட்டார்,

பருத்தித்துறை எம்.பி திரு. கே. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்ற இம்மினிக் கச்சேரியில் தொடர்ந்து உரையாற்றிய திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. சிவதாசன் குறிப்பிட்டதாவது:

இப்பகுதிகளின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்குத் திட்டமிடல் அமைச்சும் பாரா பாராளுமன்ற உறுப்பினரும் விரும்புகின்றனர் திட்டங்களும் தீட்டப்படுகின்றன. ஆனால் நிதிநெருக்கடிதான் பிரச்னையாகவுள்ளது. பன்முகம்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் 25 லட்சம் ரூபா நிதியைக் கொண்டே சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

பருத்தித்துறை எம். பி. திரு, கே. துரைரத்தினம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இப்பகுதிகவில் வாழும் மக்கள் சரித்திரப்பிரசித்தி பெற்றவர்கள். ஆனால் இப்பகுதிகள் இன்னும் பின்தங்குயிருப்பது கவலைக்குரியது. நான் 22 வருடங்களாக எம்.பியாக இருக்கின்றேன். என்னால் இயன்ற நடவடிக்கைகளை இப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொண்டுவருகிறேன்.

யாழ்.அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ், நெடுஞ்சாலைகள் பிரதமபொறியியலாளர் திரு. பாலேந்திரா யாழ் பிரதம கல்வியதிகாரி திரு. கே. பொன்னம்பலம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

---

## "கிராமிய அபிவிருத்தியே நோக்கம்"

(புலோலி)

கிராமோதயசபைகளின் அங்கத்தவர்கள் ஒற்றுமையுடனும், சேவை மனப்பான்மையுடனும் செயற்பட்டு கிரா அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும், கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காகவே கிராமோதயசபைகள் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தும்பளை கிராமோதயசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபாலனசபைத் தலைவர் பிரபல வர்த்தகர் திரு. சி. மு. கந்தசாமி தலைவர் பதவியை ஏற்று உரையாற்றுகையில் குறிப்பிட்டார். தும்பளை சைவப்பிரகாச மகாவித்திவாலயத்தில் விசேட சேவை அதிகாரி திரு. எஸ். புலேந்திரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

முன்னர் தும்பளை புலோலி கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளை இணைத்து ஒரு கிராமோதயசபையே உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவுக்கும் தனித்தனி கிராமோதயசபைகள் இருக்க வேண்டுமென்ற திட்டத்திற்கமையவே கடந்த ஞாயிற்றுக்கிழமை இக்கிராமோதயசபை அங்குரார்ப்பணக்கூட்டம் நடைபெற்றது.

---

## மன்னார் கச்சேரியிலும் செய்தி நிலையம்

(மன்னார்)

மன்னார் கச்சேரியிலும் செய்தி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை மன்னார் அரசாங்க அதிபர் திரு டி. வாமதேவன் மேற்கொண்டுள்ளார். (இ)

# தீவைப்பு வழக்கு: எதிரிகள் விடுதலை

(ஊர்காவற்றுறை

புங்குடுதீவில் வீடொன்றுக்குத் தீவைத்ததாகச் சந்தேக நபர்களான இரு பெண்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி கே. என். திலகன் முன்னிலையில் இவ்வழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. போதிய சாட்சியமின்மையால் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி ப.கதிரவேலுவும், இரண்டாம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ் கே. மகேந்திரனும் ஆஜராகியிருந்தனர்.

சாட்சியை சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் குறுக்கு விசாரணை செய்தார் விசாரணை முடிவில் போதிய சாட்சியமின்மையால் எதிரிகள் இருவரையும் நீதிபதி விடுதலை செய்து தீர்ப்பளித்தார். [கி]

## நடராசர் சிலை: நல்லூர் எம். பி கேட்பார்

[கொழும்பு)

இரம்புக்கணையிலிருந்து சுமார் 200 யார் தூரத்திலுள்ள மடமகலாவத்தையிலிருக்கும் இடம் ஒன்று 1969ல் தோண்டப்பட்டபோது அங்கே நடராசப் பெருமானினதும், அம்மனினதும் புராதனச் சிலைகள் காணப்பட்டனவா? தற்போதைய சமூக சேவைகள் அமைச்சின் பணிப்பின்மீது இந்தப் புனித சிலைகள் கோவில் ஒன்றில் பிரதிட்டை செய்யப்பட்டனவா? இதே தலம் 1972ல் தோண்டப்பட்டபோது வேறு சிலைகளும் வரலாற்றுப் பொருட்களும் காணப்பட்டனவா? மேலே உள்ள பகுதிகளுக்குரிய பதில் ஆமெனின் இந்த இடத்தை ஒரு புதை பொருள் ஆராய்ச்சி ஒதுக்கிடமாக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

மேற்கண்ட வாய்மூல விடைக்கான வினவை நல்லூர் எம். பி திரு. மு. சிவசிதம்பரம் கலாச்சார அலுவல்கள் அமைச்சரை நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். [சி]

## எனதுகாரை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார். அவர் கையில் துவக்கு வைத்திருந்தார்.

"பொலிஸ்காரர்கள் செத்துக் கிடக்கிருர்கள். இதைப் பற்றித் தகவல்கொடுக்கவேண்டும். காரைத் திருப்பு என்ருர். பருத்தித்துறை நோக்கி நின்றுகொண்டிருந்த எனது காரைத்திருப்பினேன். ஏழுபேர் காருக்குள் ஏறிக்கொண்டார்கள். யாழ்ப்பாணப்பக்கமாக நோக்கிக்காரைச் செலுத்தினேன். என்னுடைய வீட்டடியில் நிறுத்தி, பிள்ளைகளை டியூட்டரியிலிருந்து கூட்டிவர வேண்டும் என்ற தகவலைக்கூற வேண்டும் என்றுசொன்னேன். 'எங்களைத் தெரியுமோடா? விடடா காரை' என்று ஒருவர் கத்தினுர். பின்னர் ஒரிடத்தில் நான் காரை நிறுத்திஇறங்கியதும், கார் மின்னல் வேகத்தில் பறந்தது.

'மில் ஒன்றுக்கு அங்கிருந்து சென்று லொறியொன்றில் பருத்தித்துறை சென்று பருத்தித்துறைப் பொலிசில் இது பற்றிப் புகார் செய்தேன்'' என்ருர். [அ]

இதுவரை A/L விஞ்ஞான பாடங்களை மட்டும்
நடாத்தி வந்த எமது 3 நிறுவனங்களிலும்
A/L 1983 1984 பரீட்சைகளுக்கு
விஞ்ஞானம் - வர்த்தகம் - கலை
பிரிவுகளுக்குமான எல்லா பாடங்களுக்குமான
புதிய வகுப்புகள்
ஆரம்பம் 5-7-1982
BOND INSTITUTES
274/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளைகள்: 1. 72, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. 81, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
Phone 8258 Grams: BOND

ஹோம் பிஞன்ஸ் லிமிட்
நவீனமானதும் திறமைமிக்கதுமான
ORION-12'' (T. V. BLACK and WHITE)
விற்பனை செய்கின்றது
உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்
எம்மிடம் உள்ள அவசர தேவையான
மற்றைய பொருட்கள்
HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN, PHOENIX CYCLES - மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.
இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.
தலைமை காரியாலயம்: ஹோம் பிஞன்ஸ் லிமிட் இல. 463, காலி வீதி, கொழும்பு—3 தொலைபேசி;58910
கிளை காரியாலயம்: ஹோம் பிஞன்ஸ் லிமிட் இல. 82, கன்ஞதிட்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8310

## சேபால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவரின் சகோதரர் சத்தியபாலாவும் அதிகாரமில்லாது டாலர் நோட்டுக்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, இம் மாதம் 16ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

சேபால எக்கநாயக்காவின் மனைவியினதும், பிள்ளையினதும் கடவுச் சீட்டை இடை நிறுத்தி வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனப் ஏ சி.எஸ். ஹமீத்தைச் சந்தித்த இலங்கையில் உள்ள இத்தாலியத் தூதுவர் ரோம்நீதிமன்றத்தில் சேபால எக்கநாயக்காவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும், ஏற்கனவே பிடிவிருந்தும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சேபால எக்கநாயக்கா கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

1970-ம் ஆண்டு சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம் இவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ம-வெ)

## காயமுற்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் தெரிவித்தன. இப் பொலிசாரின் சொந்த ஊரான கண்டியிலுள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. (மா)

## சிருடையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

துப்பாக்கியால் தாக்கியதாகவும், சிலர் காயமடைந்ததாகவும், அங்குநிறுத்தப்பட்டிருந்த சில சைக்கிள்களும்சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நெல்லியடிப்பகுதி வெறிச்சோடிக்கிடக்கிறது. இரு சினிமாத் தியேட்டர்களும், தனியார் கல்லூரிகளும் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

வதிரிப்பகுதியிலும் நேற்று ஆயுதப்படையினரால் பொது மக்கள் தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படுகிறது. (மாஅ)

## நீதவான்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திய மண்டலப் பரிசு பெற்றவர். விஸ்வஹிந்து பரிஷத்தின் பருத்தித்துறைக்கிளையின் தலைவராகவும் இவர் இருந்தார்.

நெல்லியடியில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான மரணவிசாரணைகளை நாளை செவ்வாய்க்கிழமை நீதவான் மகேசன் மேற்கொள்ளவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலஞ்சென்ற நீதவானின் இறுதிக்கிரியைகள் இன்று பருத்தித்துறையில் நடைபெறும். [மா-அ]

## அருந்தவராஜாவின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அணிவகுப்பு மரியாதையுடன் கொண்டுசென்று பருத்தித்துறை மயானத்தில்வைத்து இறுதிமரியாதைசெலுத்தினர்.

வட பிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. ஏ. நவரத்தினம், யாழ். பொலிஸ் அதிபர் திரு. றிச்சார்ட் விஜயசேகரா, காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி ஹெட்டியாராய்ச்சி ஆகியோர் மயானத்தில் மலர் வளையம்வைத்து இறுதிஅஞ்சலி செலுத்தினர்.

# நெல்லியடி பஸ்நிலையத்தில் கிடந்த 'பார்சல்'

(கரவெட்டி)

நெல்லியடி பஸ் நிலையப் பகுதியில் கிடந்த 'பார்சல்' ஒன்று பொலிசாரையும் ராணுவத்தினரையும் பெருத்த அவலத்துக்குள்ளாக்கிவிட்டது!

பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து சில யார் தூரத்திலுள்ள நெல்லியடி பஸ் நிலையத்துக்குப் பின்னுலுள்ள இடத்தில் 'பார்சல்' ஒன்று நேற்று முன்தினம்சனிக்கிழமை கிடக்கப் பொலிசார் கண்டனர்.

மயானமாகக் காட்சியளித்த அப்பகுதியில் இவ்விதம் ஒரு பார்சல் கிடந்தது படையினருக்குத் திகிலை ஏற்படுத்திவிட்டது.

பரபரப்பான நிலையில் 'என்ன குண்டோ, என்ன பார்சலோ' என்று தலையைப் போட்டு அடித்து, அதனைத் தொடப் பயந்து, கடைசியில் ராணுவ ரசாயனப்பகுப்பாளர் வருவிக்கப்பட்டார்.

மிகவும் அவதானமாக ராணுவப்பகுப்பாளர் அணுகி, அவதானமாகப் பார்சலை எரித்தார்களாம்:

'கலக்கு கலக்கிய' பார்சலுக்குள் இருந்தது ஒரு இரும்புத்துண்டுகள்மட்டுமே.

## ஜனதிபதி வேண்டுகோள்

கொழும்பு)

நெல்லியடிச் சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து தொகுதிகளில் ஏதும் அசம்பாவிதங்கள் ஏற்படாதவண்ணம் கண்காணிக்கும்படி தொகுதி எம். பி. க்களுக்கு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார். [ம-வெ]

## மரண அறிவித்தல் - மூர்த்தி ஐயர் -

பிரபல சங்கித வித்துவானும் V. M. பேரம்பலம் அன் கோ கணக்குப் பரிசோதகருமான ஆர். மூர்த்தி ஐயர் காலமாஞர். இவர் மங்களம்மாவின் அன்புக் கணவரும், ராஜலக்ஷ்மி (இந்தியா), சீதாலக்ஷ்மி (இந்தியா), காலஞ்சென்ற ராம்தாஸ், நாகலக்ஷ்மி, விசாலாட்சி, இராமநாதன் (வீடமைப்புத் திணைக்களம்). ஜெயராமன், சம்பூர்ணம் (பெருந் தெருக்கள் திணைக்களம்), ஜானகி (இலங்கை வங்கி), கணேசகுரு ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜானகிராமன் (இந்தியா), கிருஷ்ணமூர்த்தி (இந்தியா) சுந்தரம் (ஹெப்துலாபாய் அன் கோ, கொழும்பு), சாம்பசிவம் (கமலா மோடி ஹோல்), லக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமனும், ராமச்சந்திரன் (இந்தியா), மீனுக்ஷியம்மாள் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (5-7-82) திங்கட்கிழமை 4 மணியளவில் கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதி, குமரன் அரிசி ஆலையிலுள்ள அன்னரது இல்லத்தில் நடைபெறும். 3761

## மரண அறிவித்தல் சமாதிலிங்கம் ஸ்ரீஸ்கந்தராஜா

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான சமாதிலிங்கம் ஸ்ரீஸ்கந்தராஜா காலமாஞர். இவர் வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சமாதிலிங்கத்தினதும் திருமதி அழகேந்திரவதி அவர்களினதும் புதல்வரும், பல்லைகம உதவி வைத்தியர் செல்வரத்தினம், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் சத்தியசீலன், அருந்தவலிங்கம், மன்ஞர் சரவணு நேர்ஸிங் சென்டர் திருமதி சரஸ்வதி இராமலிங்கம், சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற மணிமேகலை ஆகியோரின் சகோதரருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் யாழ். திருநெல்வேலி கிழக்கு, பதிவாளர் ஒழுங்கை, 20/1, இலக்க இல்லத்தில் இன்று (5-7-82) திங்கட்கிழமை பி. ப. 2-00 மணியளவில் நடைபெறும். 3760

## மரண அறிவித்தல் திருமதி சி. ஆறுமுகம்

திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) காலமாஞர். இவர் காலஞ்சென்ற ப. ஆறுமுகம விரிவுரையாளர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மனைவியும், காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் மகளும், திருமதி பரமநாதனின் மருமகளும், திருநாவுக்கரசு (இளைப்பாறிய நில அளவையாளர்), திருமதி இ. சிவபாதசுந்தரம், திருமதி தெ. சணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற சுவாமி சைதன்னியானந்தசரஸ்வதி, காலஞ்சென்ற டாக்டர் திருமதி ம. மகாதேவா, திருமதி பூ. மோகனதாஸ், டாக்டர் அருட்சோதி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், திரு. A. K. பரமவம்சாவின் (தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்) சிறியதாயாரும் ஆவார். ஈமக்கிரிகைகள் (5-7-82) இன்று காலை 10 மணிக்கு வியாபாரிமூலை, பருத்தித்துறையில் நடைபெறும். 3758

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 65-ம் இலக்க அச்சகத்தில் 19 ஜூலை மீ 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.